ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப் பிரதிவிலை | வெளி நாடு 0-1-6 உள் நாடு 0-1-0

# குடி அரசு

| | | | |
|---|---|---|---|
| வருட சந்தா முன்பணம் | — | ரூ. | 3—0 |
| 6-மாத சந்தா ,, | — | ,, | 1-12 |
| வெளி நாட்டிற்கு ,, | — | ,, | 4—0 |

வாரப்பதிப்பு.

ஆசிரியர் ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 5 | ஈரோடு, சுக்கில ௵ தை ௴ 27௳ (9—2—1930) ஞாயிற்றுக்கிழமை | மலர் 37

சென்னை, திருச்சி, மதுரை, கொழும்பு முதலிய பல இடங்களில் நடைபெற்ற வைத்திய மகாநாடுகளிலும், மருந்து கண் காட்சிகளிலும், அரசாங்க அதிகாரிகளாலும் பரீட்சிக்கப்பட்டு முதல்தரமான மருந்துகளென்று அநேக தங்க பதக்கங்கள் பரிசு பெற்றவரும், வைத்திய சிம்ஹம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பெஷலிஸ்ட் என்று பல பட்டங்களைப் பெற்றவருமாகிய,

## டாக்டர் சிங்காரம் அவர்களின்

# மிகவும் குணமுள்ள மருந்துகள்.

[ஓர் யோகீஸ்வரரின் அநுபவ முறைப்படி தயார்செய்யப்பட்டது.]

உலகப் பிரசித்தி பெற்ற

## மஹா சந்தனாதித் தைலம்.

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண்பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு. கண்ணில் நீர்வடிதல், கண் பூ. பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருதலை நோய், பீனிசம், காதிரைச்சல், காதுமந்தம், மண்டை குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டை சூடு, தேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

ஒரு முறை இந்தத் தைலத்தை உபயோகித்தவர்கள், அவர்களே மற்றவர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒருமுறை பரீட்சித்துப் பார்க்கவும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4.      12 அவுன்ஸ டின் ரூ. 2—2—0

## சலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கைகால் அசதி, சோம்பல், இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி, சொற்பனஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரிதஸ்கலிதம், முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விருத்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும், சுறு சுறுப்பையும் உண்டாக்கும். எவ்வளவு கடின வேலை செய்தாலும் யாதொரு களைப்பும் உண்டாகாது. சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும்; சாபபிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

## மகா வில்வாதி லேகியம்.

அஜீர்ணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் கரகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊரல், நெஞ்செரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்றுவலி, அஜீர்ணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள், நாவரோசிகம், மயக்கம், கை கால் குடைச்சல் முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

## அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச்சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச்சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்.

பலவித பழச் சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது. பாலர் விருத்தாப்பியர் யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

## குழந்தை மருந்துகள்.

கோரோஜனை மாத்திரை பாட்டல் அணா 8. கஸ்தூரி மாத்திரை பாட்டில் அணா 8. கட்டுவாதி மாத்திரை அணா 8. காரமாத்திரை அணா 8. சுகபேதி மாத்திரை அணா. 8. க்ரப்பான் எண்ணெய் ரூ. 2—0—0 மாந்தக்குடோரி எண்ணெய் ரூ. 1—0—0.

இன்னும் வல்லாவித நோய்களுக்கும் மிகவும் குணமுள்ள மருந்துகள் கிடைக்கும்.

எல்லா மருந்துகளுக்கும் பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும் விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இனமாய் அனுப்பப்படும்.

கமிஷன் ஏஜெண்டுகள் தேவை.

**டி. சி. சிங்காரம் அண்டு கோ,**

தெப்பக்குளம்போஸ்டு, திருச்சினாப்பள்ளி

## தஞ்சை ஜில்லா போர்டு தலைவர் தேர்தல்

### சுயமரியாதை இயக்கத் தலைவர் திரு. பன்னீர்செல்வம்

மூன்றும் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

27—1—30 திங்களன்று பிற்பகல் 2 மணிக்கு தஞ்சை ஜில்லா போர்டு மீட்டிங் ஹாலில் ஜில்லா போர்டு தலைவர் தேர்தல் நடைபெற்றது. உபதலைவர் திரு. என். ஆர். சாமியப்ப முதலியார் அக்கிராசனம் வகித்தார்: ஜில்லா போர்டு அங்கத்தினர்களும், பத்திரிகாசிரியர், நிருபர் இவர்கள் மட்டும் ஹாலுக்குள் அனுமதிக்கப்பட்டார்கள். 4 மணிக்கு தேர்தலின் பூர்வாங்கமான மாமூல் முறைகள் ஆரம்பிக்கப்பட்டது, புதியதாக நியமனம் செய்த மெம்பர்கள் ராஜ விசுவாச பிரமாணம் செய்தனர். தேர்தல் சட்டம் படித்துக் காட்டப்பட்டு, பாலட் பேப்பர்கள் வழங்கப்பட்டது; தலைவர் பதவிக்கு திரு. செல்வம், பெயரும், திரு. வாண்டையார் பெயரும், பிரேரபணை செய்யப்பட்டது. சகல அங்கத்தினர்களும் தங்கள் உரிமைச் சீட்டில் மார்க் செய்து மடித்து பெட்டியில் போட்டு அவை அக்கிராசனாதிபதியால் வாக்குச் சீட்டுகள் தனிக்கை செய்யப்பட்டு திரு. செல்வத்திற்கு 20 ஓட்டுகளும் டையாருக்குக்கே மற்றும் ஒரு இன்வாலட் ஓட் ஒன்றும், திரு வாண்டையாருக்கு 19 ஓட் என்றும் மொத்த ஓட் 42-ல் அபேக்ஷகர்களை-2 இன்வாலட் 1 ஆக மூன்று போக மிகுதி 39ல் 20 ஓட் பெற்ற திரு. செல்வம் வெற்றியுற்றாரென்றும் அறிவித்ததும் வெளியிலிருந்த ஜனங்கள் செல்வத்திற்கு ஜே! என்று ஆறவாரத்துடன் வெற்றியுற்ற வீரரைக் காண மீட்டிங் ஹாலை நோக்கிச் சென்றார்கள். திரு. செல்வமும் அவர் தோழர்களும் சுயமரியாதை வீரர்களுமான ஜே. அப்துல்லா V. B. காயாரோகணம், சாமியப்பா, முதலியோர் தனித்தனியாக வந்து மோட்டாரில் யேறியதும் அவர்களுக்குப் பல நூற்றுக்கணக்கான ரோஜா ஹாரங்கள் போடப்பட்டு ராமசாமி பெரியாருக்கு ஜே! பன்னீர் செல்வத்துக்கு ஜே! சாமியப்பாவுக்கு ஜே! என்று எழுந்த சப்தமானது ஆகாயமளாவியது எனலாம். என்றுமில்லா காட்சியாக தேர்தல் முடிந்தது. சுயமரியாதை இயக்க உபதலைவர் செல்வம் நீடூழி வாழ்க. (ஒரு நிருபர்)

## செங்குந்தர் மகாஜன சங்கம் 17:வது மகாநாடு துடுப்பதி

16—2—30-உ சனி, ஞாயிறு, தினங்களில் இச் சங்கத்தின் 17-வது மகாநாடு ஈரோடு தாலுக்கா, துடுப்பதி கிராமத்தில் நடைபெறும். யாவரும் விஜயம் செய்து மகாநாட்டை சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

சங்கத்தின் அங்கத்தினருக்குதான் மகாசபையில் பேசவும் தீர்மானங்கள் கொண்டுவரவும் உரிமை யிருப்பதால் தவராமல் எல்லாரும் வருஷ சந்தா 0—4—0 செலுத்தி அங்கத்தினர்களாகச் சேர்ந்துகொள்ளக் கோறப்படுகிறது.

பிரதிநிதிகளுக்கு உபசரணைக் கமிட்டியார் போஜனம், ஜாகை முதலிய வசதி யளிப்பார்கள்.

**N. B,** அவ்வமயம் செங்குந்த வாலிப சன்மார்க்க சங்க முதலாவது ஆண்டு விழாவும் நடைபெறும்.

உபசரணைக் கமிட்டி

**C, K.** நாகப்ப முதலியார். மா. வீரராகவ முதலியார் காரியதரிசி, துடுப்பதி. சி. ராமசாமி முதலியார், நாட்டாண்மை, பிரசிடெண்டு, துடுப்பதி. அ. வெங்கிடாஜல முதலியார், கஜான்சி, துடுப்பதி.

மெம்பர்கள்.

எஸ். என். அப்பாஜி முதலியார் அண்டு Bros, சி. எம். பொன்னப்ப முதலியார், செர. கந்தப்ப முதலியார், ஜ. அப்பாஜி முதலியார், கோ. ரங்கசாமி முதலியார். கி. மாணிக்க முதலியார், ஆ. கணபதி முதலியார். வீ. ரா. அங்கப்ப முதலியார், கோ. கௌரமுதலியார, மு. லட்சுமண முதலியார், கு. கைத்தமலை முதலியார், த. சி. அப்பாஜி முதலியார். T. G. வெங்கிடாஜல முதலியார் E. K. அங்கப்ப முதலியார், எல. என். சின்னப்ப முதலியார், செங்குந்தர் வாலிப சன்மார்க்க சங்க பிரசிடெண்டு, துடுப்பதி.

நிர்வாகக் கமிட்டி.

ஆர். கிருஷ்ண முதலியார், பிரசிடெண்டு, சென்னிமலை. டி. ஆர். முத்துமாணிக்க முதலியார், காரியதரிசி, துடுப்பதி.

**N. B:**—துடுப்பதி கிராமம் பெருந்துறை ரயில்வேஷ்டேஷனிலிருந்து 6-மைல் தூரத்திலிருக்கிறது, ஈரோட்டிலிருந்தும் கோயமுத்தூரிலிருந்தும் மோட்டார் வசதியுண்டு.

## பெண் தேவை.

கவர்மெண்டில் மாதம் 90 ரூபா சம்பளமும், 29 வயதும் தமிழ், இங்கிலீஷ் கற்றவருக்கு 16 வயதிற்குட்பட்ட அழகிய பெண் தேவை எந்த ஜாதியாயினும் சரி. டட்த்துடன் அடியில் கண்ட விலாசாதிற்எழுதவும்.

**M. Thangaveloo**
Assistant Foreman
*Govt Central Press*
**Bombay.**

## சுங்க குத்தகைகள்.

இராமநாதபுரம் ஜில்லா 1930 31-வருஷத்திய சுங்கங்களின் குத்தகைகளை 1930 ஹு பிப்ரவரி மீ 8உ சனிக்கிழமை மாலை 3 மணிக்கு மதுரையில் இராமநாதபுரம் டிஸ்ட்ரிக்ட் போர்டு ஆபீசில் பிரசிடெண்டவர்களால் பகிரங்கமாய் ஏலம் போடப்படும்.

2. ஏல நிபந்தனைகளை இராமநாதபுரம் டிஸ்ட்ரிக்ட் போர்டாபீஸிலிருந்து தெரிந்து கொள்ளலா.

[ஒப்பம்]
**W. P. A.** சௌந்தரபாண்டியன்
இராமநாதபுரம்:
டிஸ்ட்ரிக்ட் போர்ட்பிரசிடெண்டு.

## கடவுளை வணங்க தரகர் ஏன்?


மூட்டப்பூச்சிகளுக்கு எமன்.

எந்தச் சந்துகளில் ஆயிரக்கணக்கான மூட்டப்பூச்சிகளிருந்து கொண்டு இரவு பகல் நம் இரத்தத்தை உறிஞ்சினலும் இந்த மருந்து பட்டமாத்திரத்தில் அவ்வளவும் அச்சணமே அழிகிறது.

2 அவுன்சு பாட்டல் ரூ. 1.

தேள் விஷங்களுக்கு எமன்.

வாழத்தேள் பித்தத்தேள் சிலேத்துமத தேள் உச்சிலிங்கத்தேள் கட்டுவாக்களி இதுகள் கடித்த கடிவாயில் மருந்தைப்போட்டு பின் புகையைபிடிக்க அந்தக்ஷணமே சிறிப்பதை பார்க்கலாம்.

3 மருந்துகள் ரூ. 1.

கா. வே. வேலுமயில்,
மயிலர் திருமாளிகை
காங்கயம்.

பழநி சி. எம். சாமி,

குருதாம்பிர பஸ்பம்

இது அபூர்வ சக்தி வாய்ந்தது. திமிர், குஷ்டம், மதமதப்பு குறைநோய், வீக்கம், பெருவயறு, மகோதரம், ஆனைக்கால், பவுத்திரம், கண்டமாலை, பீனிசம், சொரிகள், பத்துகள், தடிப்புகள், பிளவை, ஆராத குழிப்புண் முதலிய சகல வியாதிகளையும் நீக்கும். அனுபவத்தில் கைகண்டது.

50 வேளை பஸ்பம் ரூபா 25. ஏழைகளுக்குப் பாதிவிலை.

ஏராளமான நற்சாக்ஷிகளை கேட்லாக்கில் பார்க்கலாம்.

அன்னிய நாட்டார் ரூ. 5 முன் பணம் அனுப்ப வேண்டும்.

சி. மலையப்பசாமி, நித்தியானந்த வைத்திய சாலை, பழநி.

# தூத்துக்குடி சைவசித்தாந்த சபை.

(கைவல்யம்)

தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் 46-வது ஆண்டு விழாவில் தலைமை வகித்த சித்தாந்தப் பத்திரிகையின் ஆசிரியர் ம. பாலசுப்பிரமணிய முதலியார் பி. ஏ., பி. எல்., செய்த பிரசங்கம் ஜனவரி மாதம் 8-தேதி "நவசக்தி"யில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதில் கண்ட சிலவற்றிற்கு பதில் சொல்லுகிறோம்.

பாரமார்த்திகத்தின் வழிக்கு மனதைத் தன் வயப்படுத்த சொரூப நிர்ணயம் எல்லாச்சமையங்களிலும் செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது அவர்கள் நிர்ணயித்த சொரூபத்தைப் பற்றிச் சுயமரியாதைக்காரர்கள் பேச வந்தவர்களன்று. அதில் எது உண்மை எது உண்மையல்லாதது என்பதை எடுத்துக்காட்ட வந்தவர்களுமன்று. தெய்வங்களின் செயல்கள் என்றைக்கும் மாறுபாடின்றி நீதியும் சத்தியமுமுள்ளதாயும் பாரபட்சமற்றதாயும் இருக்கக் கூடியதென்றும் இருக்கவேண்டுமென்றும் எடுத்துக் காட்டுவதற்கே வந்திருக்கிறார்கள். சமயத்தில் சமத்துவமில்லாமையும் நீதியில் வஞ்சனையும் சமயங்களிலிருக்கப்படாதென்பதே அவர்கள் சங்கத்தின் முக்கிய கொள்கை.

பண்டைக் காலத்துப் பாரமார்த்திகக் கொள்கைகளை தற்காலத்திய நுண்ணறிவாளர் இலேசாக நம்பாமலிருக்கையில் இந்த உலகத்தில் இத்தக்காலத்தில் சமயத்தால் பிரத்தியட்சமாக நடத்தப்படும் கொள்கைகளை பண்டைகாலத்துக் கொள்கையென்றும், பாரமார்த்திகத்தின்பந்தியென்றும், அது கடவுள் சொன்னதென்றும், சமயாச்சாரிகள் நிர்ணயம் செய்ததென்றும், சாஸ்திரப் பிரமாணமென்றும் சொல்லிகொண்டிருந்தால் அது அறிவுக்குபொருத்தமாவதில்லையே என்று தான் சுயமரியாதைச் சங்கம் தீர்மானித்திருக்கிறது. சிவ ஞானச்செல்வத்தை அடையப்போவதாகச் சொல்லும் சிவபக்தர்கள் பாரமார்த்திகமென்றும், சமய ஒழுக்கமென்றும்; அறவொழுக்கமென்றும் பிரசங்கம் செய்து கொண்டுவரும் இவர்கள் தங்கள் மனசுத்தியிலோ, அசூயையிலோ, உலக ஆசையிலோ, எவ்வளவு தூரம் மேலெழும்பியிருக்கிறார்கள் என்பதை அவர்கள் ஆலோசித்துப் பார்க்கும்படியாகவும் சுயமரியாதைக்காரர்கள் கேட்டுக் கொள்ளுகிறார்கள். சமயப் பற்றுடையவர்கள் பரமரகசியமான உண்மைகளை ஆராயவேண்டுமென்று புறப்பட்டாலும் இப்பிரபஞ்சப் பாறையிலேயே இடறி மனிதருடன் பிறந்த அறியாமை அகங்காரமமகாரங்கள் ராகத்வேஷாதிகள் ஆயவெல்லாம் அமைந்து அதனால் லௌகிக விவகாரங்களுக்கு அவர்கள் மனமிசைந்தது போலவே சமயத்திலுமதைச் செலுத்தி மற்றவர்களுக்குக் கொடுமை செய்து தாங்கள் உலக சுகாதாரீகங்களை அனுபவித்து நன்னறிவான மாளிகையில் தன்னலத்தை நிறைத்துவைத்துக் கொண்டிருப்பதைத்தனே உலகம் பார்த்துக் கொண்டிருக்கிறது என்பதை எல்லாருக்கும் சுயமரியாதைக்காரர்கள் ஞாபகமூட்டுகிறார்கள். அங்ஙனமிருக்க,

"புலாலுண்டு, கள் குடித்து தோள் வலி பெற்ற ஒருவன் குதிரை ஏறிய மதுரை வீரனுக்குப் புலால், கள் முதலியன கொடுத்து அவனைக்கடவுளாக வணங்குகிறான். சிவலிங்க வழிபாடு செய்யும் பேரறிஞர் மதுரை வீரனைக் குறைவாகவே எண்ணுவர். அது போல மதுரை வீரனைத் தொழுவோர் சிவலிங்கத்தை ஆண்குறி பெண்குறியாகவே எண்ணுவர். ஏனெனில் மீனமேஷ ரிஷபங்களைத் தின்னும் அப்பெரியாருக்கு மிதுனத்திற்கு மேற்பட்ட தத்துவங்கள் புலப்படா. அறவொழுக்கத்தில் சிறந்து இருவினை ஒப்பு மலபரிபாகம் கைவரப்பெற்றவருக்கே அச்சிவலிங்கம் திருவைந்தெழுத்தின் திருவுருவமாகவும் கடவுள் படைப்பிலுள்ள எல்லாத் தத்துவங்களையும் தன்னுள்ளடங்கிய குறியீடாகவும் காணப்படும்"

என்னும் இந்த வாக்கியமானது சைவசித்தாந்தத் தலைவரின் பிரசங்கத்தில் முக்கிய பாகமாகும். இவை அசூயைக்குணத்திற்கும் குரோத ஆணவமனதிற்கும் திருப்தியை உண்டுபண்ணும் வார்த்தை என மதித்துக்கொண்டாலும் சைவ சித்தாந்தமென்னும் சமயத்தின் தலைவரென்னும் பதவிக்கோ சமயக்கொள்கை என்னும் மேம்பாட்டிற்கோ உபயோகப்படாது. அசூயையாலும் அறியாமையாலும் மனம் குறுகியிருப்போர்கள் உணர்ச்சியைப்பற்றி கவனிப்பதில்லை. தான் சொல்லுவது நியாயத்திற்குப் பொருந்தாவிட்டால் மனம் வெட்கப்படுவதில்லை. உணர்ச்சி எண்ணம் உடையவர்கள் வார்த்தை நியாயத்திற்கு ஒத்திருக்கவேண்டும். நியாயத்தைத் ஒத்துக்கொள்ளவும் வேண்டும். நிற்க,-

புலால், கள்ளு முதலிய கொடுத்து மதுரை வீரனைத்தொழுவோர் சிவலிங்கத்தை ஆண் குறி பெண் குறியாக எண்ணுவர் என்று தூத்துக்குடி சைவ சபைத்தலைவர் சொல்லுகிறார். புலாலுண்டு மதுரை வீரனைத்தொழுவோர் சிவலிங்கத்தை ஆண் குறி பெண் குறியாகச் சொல்லவில்லை. மற்றும் யார் என்றால் பாலும், பாசிப்பருப்பும், பாதாமும், சர்க்கரையும் சேர்ந்த அக்கார அடிசிலும், பச்சரிசியும் பச்சைப் பயரும் நெய்யும் சேர்ந்த பொங்கலும், உப்பும் புளியும் கடலைப்பருப்பும் நல்லெண்ணெயும் சேர்ந்த புளியோதரையும் உண்ணும் வைணவ அய்யங்கார்களாலும் சைவர்களை தாசிமகனென்றும், அடிமையென்றும் சொல்லும் ஸ்மிருதிக்கும் ஒழுக்கமில்லாதவன், ஆசாரம் கெட்டவன், கண்டதைப் புசிப்பவன் என்று சொல்லும் இதிகாசங்களுக்குக் கருத்தாக்களான சுமார்த்தர்களாலும் பண்டிதர்களாலும் எழுதப்பட்ட சில ஏடுகளாலும் சிவலிங்கத்தை ஆண் குறி பெண் குறி யென்று சொல்லப்பட்டிருக்கின்றன. ஸ்மிருதிகளை ஆதரவாக வைத்துக்கொண்டு பாடின புராணங்களும் அந்தப்புராணக்கதை நிறைந்த தேவாரங்களில் சில பதிகங்கள் சிவனை ஆணாகவும் விஷ்ணுவை பெண்ணாகவும் சொல்லப்பட்டிருக்கின்றன. சிவபெருமான் ரிஷிகளின் பத்தினிகளை கற்பழிக்கவும் சிவ பெருமானின் ஆண் குறி அறுந்து விழ ரிஷி சபிக்கவும் அந்த ஆண் குறியை விஷ்ணு பெண்குறியாகத்தாங்கினர் என்னும் புராணக்கதையின் சைவப் பெருமையும் அதை மறக்க வைணவர்களெழுதின வைபவமும் மதுரை வீரன் உண்டாவதற்கு முன்னால் சொல்லப்பட்டவைகளாகும். விஷ்ணுவின் மோகினி ரூபத்தைக்காண சிவபெருமான் சென்று அதைக்கண்டு மோகித்து அவள் பின் தொடருகையில் வீரியம் வெளிப்பட்டது அந்த வீரியம் விழுந்த இடமெல்லாம் பொன்னுக்கும் வெள்ளிக்குமிடமாயின என்னும் சங்கதிகளை உடைய பாகவதம் அஷ்டமஸ்கந்தம் 12-வது அத்தியாயம் மதுரைவீரனைக் கும்பிடுகிறவர்கள் சொன்னதல்லவே. நாரதர் வேதவியாசருக்குச் சொல்லி வேதவியாசரிடம் சூதபுராணிகர் கேட்டு அவர் சனகர் முதலிய ரிஷிகளுக்குச் சொன்னதல்லவோ? பாகவதம் நாரதர் வியாசர், சூதபுராணிகர் இவர்களைச் சைவத்திலிருந்து தள்ளிவிட முடியுமோ? வியாசர் சொன்ன பிர்மசூத்திரம் சைவத்திற்குச் சொந்தமென்று நீலகண்டசிவாச்சாரியார் உரை எழுதவில்லையோ? பாகவதம் சொன்ன வியாசனை மட்டும் தள்ளுவதெப்படி? அந்தப் பாகவதக் கதையைக் கொண்டே தேவாரத்தில் சிவபெருமானுக்கு விஷ்ணு பெண்ஜாதி என்று பாடப்பட்டிருக்கிறதென்பதை எதனால் மறுப்பது? இவைகளைக் கொண்டும் ரிஷியின் சாபத்தால் அற்றுவிழுந்த ஆண்குறி சிவபெருமானின் மறுசாபத்தால் ரிஷியின் நெற்றியில் ஒற்றிக்கொண்ட கதைகளைப் போன்ற கதைகளாலும் இவற்றையெல்லாம் கவனித்து அதற்குத் தகுந்த பதில் சொல்ல வியாபக புத்தியில்லாத பிரசங்கத்தாலும் பணக்காரர் வீடு சேர்ந்திருக்கும் மமதையும் சட்டப் பரீட்சையின் பெருமையும் சைவ சித்தாந்த சபையின் தலைமைக்குப் போதுமென்று நினைத்த சைவக் கூட்டமும் சமயவாதிகளின் சண்டையும் ஆகிய இப்பேர்ப்பட்டவைகளை ஆதாரமாக வைத்துக்கொண்டே மிஸ். மேயோவும் சொன்னாளேயல்லாமல் மதுரைவீரனைக் கும்பிடுகிறவர்கள் முகத்தைக்கூட மிஸ். மேயோ பார்த்ததில்லை. "அறவொழுக்கத்தில் சிறந்து இருவினை ஒப்பு மலபரிபாகம் கைவரப்பட்டவர்கட்கே கடவுள் படைப்பிலுள்ள எல்லாத் தத்துவங்களையும் தன்னுளடக்கிய சிறந்த ஒப்புயர்வற்ற குறிபாடாகவுஞ் சிவ லிங்கம் காணுமா? எல்லாத் தத்துவங்களையும் தன்னுளடக்கிய சிறந்த ஒப்புயர்வற்ற குறியீடு சிவ லிங்கமென்பது சரியாகவிருந்தால் எல்லாத் தத்துவங்களையும் வெளிப் படுத்துவது ஆண்குறி, பெண்குறி என்பதில் ஆச்சரியமென்ன? சத்தியாய்சிவமாய்த் தனிப்பரமுத்தியாகிறப்பதுதானே சிவம். சிவத்தைப்புருடனாகவும்பக்தனைப் பெண்ணாகவும் பாடுவதும் பக்தியோகமல்லவோ? என்றாலும் எதற்கும் மறுப்பு வேண்டுமென்பதும் சரியே ஆயினும் மறுப்புகளினால்தான் அனேக கொடுமைகள் செய்யப்பட்டு வந்திருக்கின்றதென்பதை யார் மறுப்பார். ஆனதால் சமயத்திலுள்ள மறைப்பை எடுத்துவிட்டால் எல்லாருக்கும் சமயம் சமவெளியாக விளங்குமென்று அனேகர்கள் நினைக்கின்றார்கள். எனவே,

குறுகிய மனத்தில் சமயப் பற்றை வைத்துக் கொண்டிருக்கிறவர்களாகவும் விரிந்த எண்ணமில்லாத அசூயையுடைய பண்டிதர்களாலும் ஆண்குறி பெண் குறி என்று எழுதப்பட்டு சொல்லப்பட்டு வந்தவைகளேயல்லாமல் மதுரைவீரனைக் கும்பிடுகிறவர்களாலன்று. சமயக் கொடுமைகளுக்கும் ஜாதி மமதைகளுக்கும் பொருத்தமில்லாத சாஸ்திரங்களை ஆதாரம் காட்டுகையில் அதற்குச் சுயமரியாதைச் சங்கத்தவர்கள்சமாதானம் சொல்லவேண்டியிருக்கிறதேயல்லாமல் ஆண்குறி பெண்குறி என்னும் விஷயங்களைச் சொல்லவோ அதை நிலைநிறுத்தவோ அவர்களுக்கு ஆசையுமில்லை. அவசியமுமில்லை. "மீனமேஷ ரிஷபங்களைத் தின்னும் அப் பெரியாருக்கு மிதுனத்திற்கு மேற்பட்டத் தத்துவங்கள் புலப்படா" என்றுசொல்லி தன்னையும் சபையையும் சந்தோஷப்படுத்தின விஷயத்திற்குக் "குடி அரசு" சுருதி அனுபோகத்தை ஒட்டின நியாயத்தைச் சொல்லவேண்டியதும் அதன் வேலையாகும்.

மீன மேஷ ரிஷபங்களைத் தின்னும் பெரியாருக்கு மிதுனத்திற்கு மேற்பட்ட தத்துவங்கள் விளங்கா என்று சொன்னது அலட்சியமாகவும் தாழ்மைப் படுத்தியும் சொன்னதாகும். இந்த வார்த்தை ஒரு பெரும் சமயத்திற்குத் தலைமையும் இங்கிலீஷ் சட்ட முத்திரையும் பெற்றவர்களுக்குத் தகுந்த வார்த்தையுமல்ல. சமயத்தின் உண்மை நிச்சயத்தையும் சாஸ்திரங்களின் போக்கையும் தெரிந்துகொண்ட வார்த்தையுமன்று. இவ் வார்த்தைகளால் சமயம் விசால

(தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க)

# இதிகாசங்கள்.

## இராமாயாணம்—சுந்தரகாண்டம்

### கட்டுரை—12

(திரு. சந்திரசேகரப்பாவலர்)

(சக்கம் 43 முதல் 48 முடிய)

அனுமான் ஒரு பெரிய மண்டபத்தின் மாடியில் குதித்து அங்கிருந்த அரக்கரால் தாக்கப்பட்டான், அவன் ஒரு தூணைப்பிடுங்கிச் சுழற்றினான் அதனால் தீ உண்டாகி அம்மண்டபம் எரிந்தது. அனுமான் அங்கிருந்த காவலரைக் கொன்று ஆரவாரித்தான். அப்போது பெருஞ்சேனையோடு வந்த அமைச்சன் பிரகத்தனுடைய மகனான சம்புமாலி பல அம்புகளால் அனுமானுடைய முகம் முதலிய உறுப்புகளில் அடித்தான். அனுமான் சினந்து பாறையையும் மரங்களையும் ஏவ அவன் தடுத்தான், பின் அனுமான் ஓர் இருப்புலக்கையால் சம்புமாலியைச் சேனையோடு கொன்றான். இதை யறிந்த இராவணன் தன் அமைச்சருடைய எழு மக்களை அனுப்பினான். அவர்களை அனுமான் அடித்தும் மிதித்தும் கொன்றான். அவர்கள் சேனையும் அழிந்தது.

அது கேட்ட இராவணன் தனது ஐந்து சேனைத்தலைவர்களாகிய பூபாக்கன் விருபாக்கன், துர்த்தரன், பிரகசன் பாசகர்ணன் என்பவர்களை அனுப்பி அனுமனைப் பிடித்து வரக்கட்டளையிட்டு, "அந்தக் குரங்கு சாதாரணக் குரங்காகத் தெரியவில்லை. வாலி, சுக்கிரீவன் முதலியோரை நான் அறிவேன். அவர்கள் இப்படி இருந்தது இல்லை. ஆதலின் தகுந்த பாதுகாப்போடு செல்லுங்கள்." என்றனன். ஐந்து தலைவர்களும் சேனையோடு வந்து போரிட்டனர். அனுமான் முதலில் தேர்மேல் பாய்ந்து துர்த்தரனையும், பின் ஆச்சாமரத்தாலடித்து பூபாக்கனையும் விருபாக்கனையும் பின் ஓர் மலையில் எறிந்து பிரகசனையும் பாசகர்ணனையும் கொன்றான். ஆங்ஙனம் ஐவரையும் அழித்ததை அறிந்த இராவணன் முன் அவனுடைய மகனான அக்கன் தனது துணிவைககாட்ட, இராவணன் தன் கண்சாடையில் அவனைப் போக ஆணைதர அவன் வெளியே சென்றான்.

கடுந்தவத்தால் கிடைத்த தேரிலேறி அக்கன் போர்க்களம் வந்து அனுமன்மீது உடலெங்கும் இரத்தம் ஓடும்படி அம்புகளை விட்டான். அனுமான் அவனுடைய போர்த்திறத்தை வியந்து அவனுடைய தேரை அழித்தான் அக்கன் அவன்மேல் பாய்ந்தான். அனுமான் சமயம் பார்த்து அவனுடைய கால்களைப் பிடித்துத்தூக்கித் தரையில் அறைந்து கொன்றான்.

தன் மகன் இறந்ததையறிந்த இராவணன் தன் மூத்த மகனாகிய இந்திரசித்தைப் பார்த்து "உன் வல்லமையும் பேராற்றலும் உலகறிந்ததே. நீ சென்று அக் குரங்கை பிடித்துவா. அதனுடைய ஆற்றலை யறிந்து தக்கது செய். பெருஞ் சேனையைக் கூட்டிப் போவதால் பயனில்லை." என்றனன். இந்திரசித்து போர்க்களம் வந்து பல அம்புகளை ஏவியும் அனுமனை வெல்ல முடியாமல் நான்முகன் கணையை ஏவினான். அதனால் அனுமான் செயலற்று மூர்ச்சையடைந்து விழுந்தான். சிறிது நேரத்தின் பின் அவன் தான் நான்முகனம்பால் செயலற்றிருப்பதை உணர்ந்தான். அரக்கர் அவனைக் கயிற்றால் கட்டினார்கள். அதனால் நான்முகன் கணை வலியற்றதாயிற்று. இதையறிந்த போறிவாளனாகிய இந்திரசித்து அரக்கரின் அறியாச்செயலுக்கு வருந்தினான். அனுமானோ தான் விடுபட்டதாகக் காட்டிக்கொள்ளாமல் அரக்கர் தன்னை இராவணனிடம் கொண்டுபோவார்கள் என்ற நம்பிக்கையால் அவர்கள் அடிப்பதையும் மிதிப்பதையும் பொறுத்துக்கொண்டிருந்தான். அவர்கள் அவனை இராவணனிடம் இழுத்துச்சென்றார்கள். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

அனுமானோடு சண்டை செய்வதற்கு முதலில் சம்புமாலியும், பின் அமைச்சர் மக்கள் எழுவரும். பின் ஐந்து சேனைத்தலைவர்களும், பின் இராவணன் மகனாகிய அக்கனும் வந்தனரென்றும் அவர்களையெல்லாம் அவர்களோடு வந்த பெருஞ் சேனைகளோடு அனுமான் அழித்தானென்றும் தெரிகிறது. பின்னரே இந்திரசித்தன் வந்தான். ஒரு குரங்கைப் பிடிப்பதற்கு ஒருவர் இருவர் வந்திருப்பாரே ஒழிய பெருஞ்சேனைகளையும். கூட்டி வந்தனரென்பது அறிவிலாரும் ஒப்பமுடியாத பெரும் பொய்யாக உள்ளது. அத்தனை சேனைகளையும் அக்குரங்கு அடித்து மிதித்துக்கொன்றது என்பதும் பொய்யுரையே. இது உண்மையென்பதை விளக்குவதற்கு இந்திரசித்தை அனுப்பும்போது இராவணன் "பெருஞ் சேனையைக் கூட்டிக்கொண்டு போகவேண்டாம்" என்று சொல்வதால் விளக்குகின்றது. இதன் முன் போன சேனைகளையெல்லாம் அனுமான் கொன்று விட்டதால் இராவணன் அவ்வாறு கூறினானென்றால், அற்றன்று.

இதற்கு முன் போன பெருஞ் சேனைகள் அழிந்தமையறிந்த இராவணன் தனது உயிரனைய தலைமகன் இந்திர சித்தனோடு துணையாக மிகப் பெருஞ் சேனைகளையன்றோ அனுப்பியிருக்க வேண்டும். இந்திரசித்தனுடைய வல்லமையை அறிந்தவனானதால் அவ்வாறு கூறினானென்றால் பெருஞ்சேனைகளையும் தலைவர்களையும் தன் மகன் அக்கனையும் கொன்ற குரங்கின் ஆற்றலையும் இராவணன் பெரிதாகத்தானே மதித்திருத்தல் வேண்டும்? ஆதலின் இராவணன் அனுமக்குரங்கின் புன்மையை உணர்ந்தே உதவிக்குச் சேனையை அழைத்துப்போகாதே எனக்கூறியிருத்தல் வேண்டும். மேலும் தலைவர்களோடு சகல சேனைகளையழித்தகுரங்கு இந்திரசித்தன் ஒருவனிடம் கட்டுப்பட்டுக் கீழே விழுந்ததென்பது எங்ஙனம் பொருந்தும். ஆதலின் அக்கன் முதலியோர் பெருஞ் சேனைகளோடு சென்று மடிந்தனரென்பது பொய்யுரையேதான் என்ற உண்மை நிலைபெறுகின்றது. இதனால் இப்பொய்யுரைகளெல்லாம் அனுமனுடைய ஆற்றலை மிகைபடக் கூறி உலகத்தாரை ஏமாற்ற எழுந்த போலியுரைகளோ என்பது விளங்குகிறது.

சம்புமாலியும் அமைச்சர்களும் சேனைத்தலைவரும், அக்கனும் இராவணனால் அனுமக்குரங்கைப் பிடித்துத்தர ஏவப்பெற்று அக்குரங்கைப் பிடிக்க வந்திருப்பர். அக்குரங்கு சீறி விழுந்து அவர்களைக் கடித்திருக்க வேண்டும். அதனால் அவர்கள் அஞ்சி ஓடியிருக்கலாம். இதையே வால்மீகி கொன்றதாகவும் குத்தியதாகவும் விண்கோட்டைகட்டியிருக்க வேண்டும். பெரிய குரங்காதலின் ஒருவேளை அது ஒருவரிருவரைக் கொன்றாயிருக்கலாம். அனுமனைத் தமிழ் மகனாகக்கொள்ளின் அக்குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்பு இராவணனால் அனுப்பப்பெற்ற வீரர்களை ஒருவேளை அடித்துக்கொன்றிருக்கலாம். சில தடி வீரர் பலரைக்கொல்லுதல் கூடியதே. இது உண்மையாயின் தமக்கு உதவி செய்த கோடரிக்காம்புகளாகிய அனுமனாதியோரையும் ஆரியர் குரங்கெனவே தாழ்த்திக் கூறியது அவர் தம் நன்றியறிவற்ற நயவஞ்சகச் செயலையே உணர்த்துவதாகும். குலத்தைக்கெடுக்கவந்த கோடாரிக்காம்புகளாகிய அனுமான், சுக்கிரீவன் முதலிய தீயோருக்கு இத்தாழ்வுரை தகும் தகும்!

இந்திரசித்தன் ஏவிய நான் முகனம்பால் அனுமான் கட்டுண்டு கீழே விழுந்தான். சிறிது நேரத்தின் பின் உணர்ச்சி வந்துதான் நான்முகனம்பால் கட்டுண்டு கிடப்பதை உணர்கின்றான். இச்சமயம் அனுமான் தனக்கு நான் முகன் கொடுத்த வரத்தை நினைக்கின்றானென்று பொய்க்கதை கூறப்பெறுகிறது. அது கிடக்க, அனுமானை அரக்கர் கயிறு கொண்டு கட்டுகின்றார்கள். அதனால் நான்முகனம்பு வலியற்றதாகிறதாம்! என்னே இந்நான்முகனம்பின் பெருமை! ஒரு கயிற்றால் கட்டி அதற்கு மேலும் வலிதரும் பொருட்டு மறு கயிற்றாலும் கட்டுவது இயல்பு. இதற்கு மாறாக ஓர் அம்பின் கட்டு மற்றொரு கட்டால் அற்றதென்பது வேடிக்கையாகவே இருக்கிறது. இதற்கு மேல் வேடிக்கையாவது இவ்வாறு நான்முகன் கணைப்பிணைப்பு அற்றதறிந்தும் அனுமான் கட்டுண்டவன் போலப் பாசாங்கு செய்திருந்தனனும்! ஏனென்றால் அவர்கள் தன்னை இராவணன் முன் இழுத்துப் போவார்கள் என்ற நம்பிக்கையால் அவ்வாறிருந்தனனும்! அதனால் அரக்கருடைய அடிகளையும் மிதிகளையும் பட்டுக்கொண்டு அவன் பொறுத்திருந்தானும்! என்னே இவ்வாரியர் தம் மயக்குரை! குப்புற விழுந்தும் மேல் வீசையில் மண் ஒட்டவில்லையென்று ஒருவன் கூறிய கதை போலன்றோ ஈதுள்ளது! பேராற்றல் படைத்தவனெனக்கூறப்பெறும் அனுமானுக்கு அவர்களால் அடித்தும் மிதித்தும் இழுத்தும் அவமானம் செய்யப்பெற்றுத்தானா இராவணன் முன் போகவேண்டும்? உடனே அக்கட்டை நொறுக்கி அவர்களைக்கொன்று இராவணன் முன் தானே போய் நின்று விடக்கூடாதா அவன்? இதனால் அனுமானைப்பற்றி இங்ஙனம் மிகைபடக் கூறும் உரைகளெல்லாம் ஆரியர் தம் போலி மயக்குரைகளே என்பது தெளிவு. இதனால் அக்கன், சம்புமாலி முதலியவர்களால் பிடித்துக்கொண்டு போக முடியாத அனுமானை இந்திரசித்தன் கட்டி அடித்து இழுத்துக்கொண்டு போனான் என்பது தெரிகிறது. இனி கம்பர்போக்கைக் காண்பாம்.

அனுமான் மணி மண்டபத்தின் மேல் குதித்துத் தூணைப்பிடுங்கிச் சுழற்றியதால் அம்மண்டபம் தீப்பிடித்தழிந்த செய்தியையும் அமைச்சர் மக்கள் எழுவர் போர் தொடுத்ததையும் கம்பர் கூறவில்லை. அவர்கள் புரிந்த போரினை வால்மீகியைக்காட்டிலும் பன் மடங்கு மிகைப்படுத்தியும் அங்கங்கே அனுமானுடைய பெருமை விளங்குமாறும் பெரும்பாலும் வால்மீகி கூற்றுக்கு மாறாகவே கம்பர் கூறிப்போகிறார். அக்கனைக் கண்சாடையாலேயே குறிப்புணர்ந்து இராவணன் அனுப்பியிருக்க, கம்பர் அவன் அடிபணிந்து பல வேண்டி விடைபெற்றுப்போனதாக பல கூறுகிறார். அக்கனுக்குத் தேரோட்டி நல்லுரை கூறி அனுமனோடு எச்சரிக்கையாகப் போரிடப்புகன்றனனெனவும் அவர் புதுக்கதை புனைகிறார்.

தன் முன்னிருந்த இந்திரசித்தனைப்பல கூறி இராவணன் அனுப்பினனென வால்மீகி கூற, அதற்குமாறாக அக்கன் மடிந்த செய்தி கேட்ட இந்திரசித்தன் மிகச்சினந்து வருந்தித் தேரேறி இராவணனரண்மனையடைந்து தன்னைப்போருக்கனுப்பப்பலபடக்கூறி வேண்டினனெனக் கம்பர் கூறுகிறார். இந்திரசித்தன் தேரை "ஆறிருநூறு பேர்"கள் (1200) இழுத்துச்சென்றன. எனக்கம்பர் கூறுகிறார். இத்தகையதாயின் அத்தேர் எத்தகையதாயிருக்கவேண்டும்? அது சென்ற தெருவும் அவ்வூரும் எத்தகையனவாதல் வேண்டும்? கம்பர் தன்

(தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க)

# ஈ. வெ. இராமசாமியாரின் மலேயா நாட்டு சுற்றுப்பிரயாணம்.

## "எதிர்பிரசாரத்தினால்" ஏற்பட்ட நன்மைகள்.

(சென்ற வாரம் தொடர்ச்சி)

(சென்றவாரத் தொடர்ச்சி.)

### 1—1—30

### சிரம்பான்.

மறுநாள் காலையில் அங்கிருந்துசங்கே ஜன்ஸ் எஸ்டேட்டைப் பார்க்கவரும்படி அழைக்கவந்திருந்த திருவாளர்கள் திருச்சி சுந்திரராஜுலுநாயுடு அவர்கள் அழைப்புக்கிணங்கி திரு ராமசாமியாரும் அவர் கோஷ்டியும் சென்று அங்கு சிற்றுண்டி ஏற்று எஸ்டேட சம்மந்தமான விவரங்கள் தெரிந்து புகைப்படம் எடுக்கப்பட்டன. அங்கிருந்துநேரே தம்பினுக்கு வந்தார்கள். தம்பனுக்கு வருவதற்கு முன்பே சிரம்பானில் இருந்து அழைக்க வந்து காத்துக் கொண்டிருந்தவர்களில் கார்களில் எல்லோரும் அழைத்துச்செல்லப்பட்டார்கள். அங்கு யாழ்பாண கனவானாகிய திரு. ஆறுமுகம் அவர்கள் பங்களாவில் ஜாகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபடி அங்கு சென்றதும் பலமான விருந்து நடந்தது பிறகு அவ்வூர் பிரபலஸ்தர்கள் எல்லோரும் வந்து இயக்கத்தின் பெருமையைப்பற்றியும் அது இவ்வளவு சீக்கிரத்தில் இந்திய மக்களுக்குச் செய்துள்ள அபார நன்மைகளைப்பற்றியும் மனமாற்றத்தைப்பற்றியும் பிரமாதமாகப் புகழ்ந்து பேசிக்கொண்டிருந்துவிட்டு மாலை 4-30 மணிக்கு அவ்வூர் நகர மண்டபத்தில் பிரபல டாக்டர் கிருஷ்ணன் ஜே. பி. அவர்கள் தலைமையில் மீட்டிங் கூட்டப்பட்டது.

உபன்னியாசகர்களும் பிரமுகர்களும் கூட மண்டபத்திற்குள் நுழைய முடியாதபடி கூட்டம் அவ்வளவு கூடிவிட்டது. கூட்டம் ஆரம்பமானதும் தலைவர் திரு. ராமசாமியாரைப்புகழ்ந்து சொல்லப்பட்ட முகவுரை ஆனதும் சிரம்பான் தமிழ் மக்கள் சார்பாக ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. பிறகு திரு. ராமசாமியார் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி சுமார் 2 மணி வரை பேசினார். இங்கு இவ்விஷயத்தைப்பற்றி எவ்வித ஆக்ஷேபனையும் யாரும் இனி புதிதாக சொல்லமுடியாதபடி தானே கேள்வி ரூபமாக அநேக விஷயங்களைச் சொல்லிக்கொண்டு அதற்கு விடைசொல்லும் முகமாக ஒவ்வொருவரையும் கேள்வி கேட்பதுபோல் வெகு தெளிவாய் பேசினது குறிப்பிடத்தக்கது. பிறகு திரு. ராமனாதன் அவர்கள் ஆங்கிலத்தில் பேசினார். பிறகு கூட்டம் 8-மணிக்கு தலைவர் முடிவுரையுடன் முடிவு பெற்றது. அன்று இரவு திரு. ஆறுமுகம் பங்களாவிலேயே விருந்து நடந்தது.

### 2—1—30

மறுநாள் காலையில் டாக்டர் கிருஷ்ணன் ஜே. பி. அவர்கள் வீட்டில் காலை ஆகாரம் வெகு விமரிசையாய் நடந்தபின் சிரம்பான் பொது மக்கள் ஒரு புகைப்படமும், டாக்டர் திரு. கிருஷ்ணன் முதலிய முக்கியஸ்தர்கள் குடும்பத்துடன் ஒரு புகைப்படமும், திண்டுக்கல் திரு. சிவா அவர்கள்வீட்டில் குடும்பத்துடன் பல புகைப்படமும் எடுத்த பிறகுகோலாலம்பூரிலிருந்து அழைத்துப்போகவந்திருந்த கனவான்களால் கோஷ்டியுடன்பெருத்த கூட்டமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். 2—1—30௳ பகல் 12-மணிக்கு கோஷ்டி கோலாலம்பூர் வந்தடைந்ததும் அவ்வூர் பிரமுகர்களால் பாண்டு வாத்தியங்களுடன்ஊர்வலமாகதிரு கருணையரெட்டியார் அவர்கள் பங்களாவிற்கு கூட்டமாக அழைத்துச்சென்றார்கள். வழிநெடுக சுயமரியாதை வாக்கியங்கள் கொண்ட வளைவுகளும் பாட்டுகளும் தோரணங்களும்பச்சிலை அலங்காரங்களும் வெகு ஆடம்பரமாய் செய்யப்பட்டிருந்தன. வழியில் புகைப்படங்கள் எடுக்கப்பட்டது. ஜாகைக்காக ஏற்படுத்திய பங்களா முழுவதும் தோட்டம் முழுவதும் கொடித்தோரணங்களாலும்மின்சாரவிளக்குத்தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அங்கு சென்றதும் விருந்து நடந்தது பிறகுபிரபல கனவான்கள் அறிமுகம் செய்துவைக்கப்பட்டு பேசிக்கொண்டிருந்து சரியாய் 4-30 மணிக்கு கோலாலம்பூர் நகரமண்டபத்தில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. அக் கூட்டத்திற்கு ஹாலில் இடம் போதாமல் அனேகர் வெளியில் காத்துக்கொண்டிருந்தார்கள். அக்கூட்டத்திற்கு கோலாலம்பூர் பழம் பெரும் கீர்த்திவானும் பிரபல கனவானும் ஆகிய திரு. ஆர். டி. ராமசாமி பிள்ளை, ஜே. பி. அவர்கள் தலைமைவகித்தார். முகவுரையாக சுயமரியாதை கொள்கையைப்பற்றி புகழ்ந்து பேசிய பிறகு பலஉபசாரப் பத்திரங்கள் படிக்கப்பட்டன. கோலாலம்பூர் பொது ஜனங்களால் ஒரு உபசாரப்பத்திரமும் மருத்துவகுல சங்கத்தாரால் ஒரு உபசாரப்பத்திரமும், ஆதிதிராவிட சங்கத்தார் சார்பாக ஒரு உபசாரப் பத்திரமும், இந்து மகாஜன சங்கத்தின் சார்பாக ஒரு உபசாரப்பத்திரமும் வாசித்துக்கொடுக்கப்பட்டது. திரு. ராமசாமியார் இவைகளுக்குப் பதில் உரைக்கையில் ஒரே உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுத்திருந்தால் நன்றாயிருந்திருக்குமென்றும் ஆனால் நமது மதமும் ஜாதியும் இப்படிச்செய்யக் கட்டாயப்படுத்துகின்றதென்றும் சொல்லி சுயமரியாதை இயக்கமும் இந்து மதமும் என்பதுபற்றி பேசினார். திரு. ராமனாதன் ஆங்கிலத்தில் பேசியபின்பு கூட்டம் 7-மணிக்கு தலைவர் முடிவுரையுடன் முடிவு பெற்றது.

பிறகு அங்கிருந்து அவ்வூர் இந்திய சங்கத்தாரின் அழைப்புக்கிணங்கி சென்றார்கள். அங்கு பாரிஸ்டர் சர்மா அவர்கள் தலைமை வகித்தார். பாரிஸ்டர் ஆனரபிள் வீராசாமி அவர்கள் வரவேற்பு உபசாரம் சொன்னார். அப்படிச்சொல்லுகையில் இந்தியர்கள் என்றைக்காவது மனிதர்கள் என்று மதிக்கப்படுவார்களானால் அது திரு. ராமசாமியாரால் தான் முடிந்திருக்குமென்றும், இராமசாமி ஒருவரே மனிதத்தொண்டு செய்பவர் என்றும், அவரது இயக்கம் தென் இந்தியா மாத்திரமல்ல இந்தியா மாத்திரமல்ல உலகமே சீக்கிரம் பின்பற்றி உலகமக்கள் எல்லோரும் ஒன்றுபடுகின்ற உணர்ச்சி உண்டாக்குமென்றும் சொன்னார்.பிறகு ராமசாமியார் பதில் சொல்லும்போது மக்கள் தங்கள் பகுத்தறிவை உபயோகிக்க ஆரம்பித்து விட்டால் உலகத்திற்கு யாருடைய உதவியும் தேவையில்லை என்றும் சிலர் கடவுளுக்கும் மதத்திற்கு மாத்திரம் பகுத்தறிவு உபயோகிக்கக்கூடாது என்று சொல்வது பொது பகுத்தறிவையே பாழ்படுத்திவிடுகின்றதென்றும் சொல்லி மக்களுக்குச்செய்யும் தொண்டுதான் தொண்டே ஒழிய மற்றது எல்லாம் சுயநலத்தொண்டென்றும் சொன்னார். பிறகு திரு. ராமனாதன் ஆங்கிலத்தில் எடுத்துச்சொன்னார். தலைவர் பாரிஸ்டர் சர்மா அவர்கள் பகுத்தறிவு வேறு மதம் வேறு என்றும் மதம் பகுத்தறிவுக்கு ஒத்து இருக்காது என்றும் நம்பித்தான் ஆகவேண்டுமென்றும் ஆனால் மதத்தின் பேரால் பகுத்தறிவுக்கு ஒவ்வாத காரியங்கள் இருப்பதை விலக்கவேண்டுமென்றும் சொன்னார். ஆனரபிள் பாரிஸ்டர் வீராசாமி அவர்களால் மாலை இடப்பட்டு காரியதரிசி திரு நாராயண அய்யரால் வந்தனோபசாரம்சொல்லப்பட்டு அந்த இரவில் அங்கு இரண்டுவித புகைப்படமெடுக்கப்பட்டு கூட்டம் முடிந்த உடன் அங்கிருந்து இரண்டு மைல் தூரத்தில் உள்ள செந்துல் வாலிப சங்கத்தாரின் அழைப்புக்கிணங்கி ஒரு பெரிய கொட்டகைக்குள் சென்றார்கள். அங்கு சுமார் 4000, 5000 மக்களுக்கு மேலாகவே கூடிவிட்டார்கள். பெரிதும் வாலிபர்களாகவே கூடியிருந்தார்கள். அக் கூட்டத்திற்கு திரு. கே. ராமச்சந்திர நாயுடு அவர்கள் தலைமை வகித்தார். வாலிபர்கள் சார்பாக ஒரு உபசாரப் பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. அங்கு இளைஞர்கள் அதிகமாயிருந்தபடியால் வாலிபர்களிடமிருந்து இந்தியா எதிர்பார்ப்பது இன்னதென்றும் இந்து மதம், சடங்கு, கடவுள்கள், புராணம், ஆகியவைகளைப்பற்றி மிக விரிவாகவும் வெரும் கேலியாகவுமே 2 30மணி நேரம் பேசினார். ஆரம்பம் முதல் சிரிப்பாகவே இருந்தது; பிறகு தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இரவு 11 மணிக்கு முடிவு பெற்றது. இரவு விருந்து ஜாகையில் நடந்தது.

### 3—1—30

மறுநாள் காலையில் 8 மணிக்கு திரு ராஜகோபால் அவர்கள் அழைப்பிற்கிணங்கி கோலாலம்பூர் மருத்துவ சங்கம் திறந்து வைக்கச்சென்றார். சங்கத்திற்காகக் குறிப்பிட்டிருந்த இடத்தை இரண்டொருவார்த்தை சொல்லி ஒரு தங்கச்சாவியினால் திறந்துவைத்துவிட்டு வேறு ஒரு கொட்டகையில் திரு. ராஜகோபால் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அங்கு பல்லாயிரமக்கள் கூடியிருந்தார்கள். அங்கு திரு ராமசாமியார் மருத்துவகுலத்தவர்கள் முன்னேற்றம் அடைவதற்குரிய வழிகள் என்பதைப்பற்றியும் பொதுவாக தாழ்த்தப்பட்ட மக்கள் தொழிலாளிகள் நடந்துகொள்ள வேண்டிய முறையைப் பற்றியும் 1-30மணி நேரம் பேசினார். பின்னர் திருவாளர்கள் ராமனாதன், பொன்னம்பலனார், சாமி சிதம்பரனார் பேசினார்கள். பிறகு தலைவர் முடிவுரையுடன் கூட்டம் 11மணிக்கு கலைந்தது.

## வெந்நீர் ஊற்று

பிறகு உடனே கோலாலம்பூருக்கு 16-வது மைலில் உள்ள வெந்நீர் ஊற்றுக்குச்சென்று அங்கு வெந்நீர் ஊற்றுப்பெருகி ஓடையாய் ஒடுவதைப்பார்ப்பது என்று ஏற்கனவே ஏற்பாடு செய்திருந்தபடி திரு. ராமசாமியாரும் மற்றும் கோஷ்டியாரும் அவ்வூர் திரு. சடையனர் அவர்கள் முயர்ச்சியில் பிரபலஸ்தர்களுமாக கார்களில் சென்று' அங்கிருந்து ஏற்கனவே அலங்கரிக்கப்பட்டிருந்த ஓர் ஜாகையில் தங்கி வெந்நீர் ஊற்றில் ஸ்நானம் செய்து விட்டு அவ்விடத்தில் ஏற்பாடுசெய்திருந்த 'தோட்ட விருந்து சாப்பிட்டு விட்டு புகைப்படம் எடுக்கப்பட்டுஎல்லோரும் மறுபடியும் 4மணிக்கு கோலாலம்பூருக்குவந்து,சேர்ந்தார்கள். பிறகு மாலை 5 மணிக்கு கோலாலம்பூர் ஈஸ்ட்டர்ண் ஓரியண்டல் ஓட்டல் என்கின்ற ஒரு பிரபல ஆங்கிலேய ஓட்டலில் ஒரு டி பார்ட்டி நடந்தது. அதற்கு கோலாலம்பூரிலுள்ள ஐரோப்பியர், இந்தியர், ஜப்பானியர், சீன பிரபல கனவான்களும் சுயமரியாதைத் தொண்டர்களும் பல பெண் மணிகளும் அழைக்கப்பட்டிருந்தார்கள் டீ பார்ட்டிக்கு ராணுவ பாண்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (இந்த டீபார்ட்டிக்கு சுமார் 400 வெள்ளி அதாவது 600 ரூ. செலவிருக்கும்) டீபார்ட்டி துவக்குமுன்பு எல்லாகனவான்களுக்கும் விருந்தாளிகளை அறிமுகம் செய்து வைக்கப்பட்டு டீபார்டி முடிந்ததும் திரு. ஆர். டி. ராமசாமி பிள்ளை ஜே. பி. அவர்களால் வந்தனோபசாரம் சொல்லப்பட்டு பிறகு திருவாளர்கள் ராமசாமியும் ராமநாதனும் தமிழிலும் ஆங்கிலத்திலும்பதில் சொல்லுகையில் தாங்கள் இவ்விடம் வந்த உத்தேசத்தை விளக்கிக் காட்டி நம்மைச்சுற்றி உள்ள உலகமெல்லாம் அறிவு ஆராய்ச்சி என்கின்ற உணர்ச்சியில் வாழ்ந்து முன்னேறிக் கொண்டு போகின்றதென்றும் தங்களது நாடு மாத்திரம் விதி மோட்சம் என்கின்ற உணர்ச்சியினால் கெட்டு பின்னடைந்து கொண்டு போகின்றதென்றும் இதை எடுத்துச் சொல்லி உங்களுடைய சொந்த பகுத்தறிவையும் காரணங்களையும் கொண்டு யோசித்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்ளவே வந்தோமென்றும் இந்த தங்களுடைய வேண்டு கோளுக்கு எதிர் பார்த்ததற்கு மேலான ஆதரவு கிடைத்ததற்கு தாங்கள் மிகுதியும் மகிழ்ச்சி அடைவதாயும் இங்கு நடந்த இந்த மரியாதைக்கு நன்றி செலுத்துவதாயும் சொன்னார்கள் பிறகு மாலை 6-30 மணிக்கு நிகழ்ச்சிக்குறிப்புப்படி கோலாலம்பூர் விவேகானந்தா ஆச்சிரமத்தாரின் வரவேற்புக்கிணங்கி அங்கு செல்லப்பட்டது அங்கு ஏற்கனவே எராளமான கூட்டம் கூடி இருந்தது அக்கூட்டத்தில் சுமார் 2000 பேருக்கு மேலாக இருந்தாலும் சுமார் 1500 பேர்கள் பெண்களும் மிக்க "வைதீக" கோஷ்டியினராகவே காணப்பட்டார்கள் உயர்திரு விஸ்வலிங்கம் பிள்ளையவர்கள்தலைமை வகித்து திரு ராமசாமியாரையும் அவரது குடும்பத்தாரையும் தெரியுமென்றும் மற்றும் அவரது தொண்டின் பலனால் இந்தியாவில் ஏற்பட்ட உணர்ச்சியைப் பற்றியும் எடுத்துச் சொல்லி மாலையிட்டு பேசும்படி கேட்டுக் கொண்டார். திரு ராமசாமியார் அன்று பெரிதும் மிகக தத்துவ ஆராய்ச்சி முறையிலேயேபேசினார். சுவாமி விவேகானந்தாவின் பெயரினால் சென்னையில் பார்ப்பனர்கள் செய்யும் ஏமாற்றத்தையும் வஞ்சகத்தையும் பற்றியும் ராமகிருஷ்ண மிஷினில் சேர்ந்திருக்கும் பார்ப்பனர்களில் 100 க்கு 90 பேர் யோக்கியமற்றவர்கள் என்றும் உதாரணமாக சென்னையில் உள்ள ராமகிருஷ்ண ஹோம் என்கின்ற இடத்தில் நடக்கும் அக்கிரமம் கணக்கு வழக்கில்லை யென்றும் அங்கு நடக்கும் பணம் நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது பார்ப்பனரல்லாதாருடையதென்றும் வருஷம் 20000, 30000 ஆயிரம் அந்த ஹோமின் பேரில் பார்ப்பனரல்லாதாரிடமிருந்து கொள்ளை அடிக்கப்படுகின்றதென்றும் இதை அறிந்த தனது நண்பரும் சுயமரியாதை சங்கத்தலைவருமான உயர்திரு டபிள்யூ பி. ஏ. சௌந்திரபாண்டியர் சட்ட சபையில் கூட கேள்வி கேட்டு அக்கொள்ளையை நிறுத்த முயற்சித்தார் என்றும் ஆனாலும் அரசாங்கத்தில் முக்கிய உத்தியோகத்தில் இருக்கும் பார்ப்பனர்கள் செல்வாக்கால் பார்ப்பனரல்லாத பயங்காளிப் பெரியவர்கள் அவர்களுக்கு அடிமையாகி சிறிதும் சுயமரியாதை உணர்ச்சி இல்லாமல் பொது மக்கள் பணத்தை வசூல் செய்து கொடுக்கின்றார்கள் என்றும் இங்கும் அது போல் இருக்கக்கூடாதென்று ஆசைப்படுவதாகவும் விவேகானந்தர் அமெரிக்காவுக்கு இந்து மதப்பிரதிநிதியாய் அனுப்பப்பட்டிருந்தாலும் அவர் உண்மையான பிரதிநிதியாய் இல்லாமல்இந்து மதத்திற்கு ஒரு வக்கீலாய் போய் கேசை ஜெயித்துக் கொண்டு வந்தாரென்றும் ஆகையால் அதனாலேயே இந்து மதம் என்பதற்கு யோக்கியதை வந்து விடாதென்றும் அவர் இந்தியாவையும் இந்துக்களையும் பற்றி இந்தியாவில் பேசி இருப்பதை பாருங்கள் என்றும் பார்ப்பனர்களைப் பற்றி கண்டித்துச் சொல்லி இருப்பதும் வருணாசிரமம் ஜாதி வித்தியாசம் ஆகியவைகளைப் பற்றி கண்டித்துக் சொல்லி இருப்பதையும் இந்து அரசாங்கமாகிய மலையாளத்தைப்பற்றி சொல்லி இருப்பதையும் அவர் விக்கிரகங்களைப்பற்றி சொல்லும் போது அவை பாமர மக்களுக்கு வேண்டி ஏற்பட்டதே ஒழிய மற்றவர்களுக்கு அல்ல என்று தான் சொன்னாரென்றும் ஆனால் இப்போதைய விக்கிரகங்களைபாமரமககளுக்கு உபயோகப்படாமலும் கண்ணில் பார்க்கக்கூட இடம் தராமலும் பண்டிதர்கள் பிரம்ஞானம் உடையவர்கள் கடவுளாலேயே அறிவாளிகளாய் பிறப்பிக்கப்பட்ட மக்கள் என்று சொல்லிக்கொள்ளுகின்றவர்களுக்கும் அவர்களது வயிற்றுப்பிழைப்புக்கும் தான் சாதனமாயிருக்கின்றதென்றும் மற்றும் தென் இந்தியாவுக்கு வேண்டியதெல்லாம் உண்மையான சுயமரியாதையே என்று சொல்லி அவர் இருக்கின்றார் என்றும் மற்றும் இப்படி அவர் சொன்ன அனேக விஷயங்களை புஸ்தகத்தைப் பார்த்தே எடுத்துச் சொல்லி 2 மணி நேரம் கூட்டத்தையே ஆச்சரியப்படும்படி செய்து விட்டார். பிறகு தலைவர் முடிவுரை சொல்லி கூட்டம் 10 மணிக்குக் கலைந்தது பிறகு அன்றிரவு கழிந்து.

4—1—30

மறுநாள் காலையில் ஆனரபிள் பாரிஸ்டர் வீரசாமி அவர்கள் வீட்டில் ஒரு காலை விருந்து பெரிய செலவில் நடந்ததும் கோலகுப்பிலிருந்து அழைத்துப்போக வந்தவர்களால் காலை 9 மணிக்கு திரு. ராமசாமியாரும் கோஷ்டியும் கார்களில் கோலக்குப்புக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள் அங்கு பொது ஜனங்களால் மேள வாத்தியங்களுடன் வரவேற்கப்பட்டு திரு. குமாரசாமி மாண்டேர் அவர்களால் ஓர் விருந்து நடத்தி மறுபடியும் மேள வாத்தியங்களுடன் நாடகக் கொட்டகைக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள் அங்கும் எராளமானமக்கள் கூடிஇருந்தார்கள் திரு. சண்முகம்போஸ்ட்மாஸ்டர் அவர்கள் தலைமை வகித்தார். தலைவர் முகவுரைக்குப்பின் திரு ராமசாமியாருக்கு கோலக்குப்பு தமிழ் மக்களால் ஒரு வரவேற்புப்பத்திரம் வாசித்துகொடுக்கப்பட்டபின் சுமார் ஒன்றரை மணி நேரம் சுயமரிமாதை இயக்கத்தைப் பற்றிப் பேசினார் தலைவர் முடிவுரையில் சுயமரியாதை இயக்கத்தில் புதிய கொள்கை ஒன்றும் இல்லை என்றும் எல்லாம் நமது ஞானிகளும் சித்தர்களும் ராமலிங்கசாமி தாயுமானவர்கள் அருணகிரியார் கபிலர் ஆகியவர்கள் சொன்னவைகளே என்றும் ஆதலால் நாம் அவற்றை கைப்பற்றினால் தான் உண்மையான மனிதர்கள் ஆவோம் என்றும் சொல்லி திரு., ராமசாமியாருக்கு வந்தனம் சொல்லி கூட்டத்தை முடித்தார். உடனே மாலை 4-30 மணிக்கு திரு ராமசாமியாரும் கோஷ்டியாரும் தஞ்சமாலிமிலிருந்து வந்த கனவான்களால் தஞ்சமாலிமுக்கு கார்களில் அழைத்துச் செல்லப்பட்டார்கள் அங்கு சென்றதும் அவ்வூர் பிரமுகர்களால் வரவேற்கப்பட்டு திரு கோபால்சாமி நாயுடு அவர்கள் பங்களாவில் ஜாகை ஏற்பாடு செய்து அங்கு மாலை சிற்றுண்டி ஆனதும் மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு ரயில்வே குவார்டர்ஸ் மைதானத்தில் ஒரு பெரிய கூட்டம் நடந்தது இங்கும் பெண்களும் ஆண்களும் பல ஆயிரக்கணக்காக உள்ளூரிலிருந்தும் வெளிஊர்களிலிருந்து தோட்டக்கூலிகளும் வந்து கூடியிருந்தார்கள் கூட்டத்திற்கு ஸ்டேஷன் மாஸ்டர் திருவிளங்கம் அவர்கள் தலைமை வகித்தார்கள் அங்கு இரண்டு உபசாரப்பத்திரங்கள் அளிக்கப்பட்டது அப்பத்திரத்தில் கண்டித்திருந்த இந்து மதம் என்பதைப் பற்றியே இரண்டு மணிநேரம் பேசினார் திரு. ராமநாதன் அவர்கள் ஆங்கிலத்தில் பேசினார் திரு பொன்னம்பலனார் ஒரு பாட்டு பாடினார் பிறகு தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் மறுபடியும் திரு ராமசாமியாரை மேளவாத்தியங்களுடன் ஜாகைக்கு அழைத்து வந்து விட்டது. அன்றிரவு திரு கோபால்சாமி நாயுடு அவர்கள் வீட்டில் ஒரு பெரு விருந்து நடந்தபின் அன்றிரவு 1 மணி வரையில் பல ஊர்களிலிருந்து வந்திருந்த பல கனவான்களுடன் பேசிக்கொண்டிருந்து அன்றைய இரவைக் கழித்ததும்

5—1—30

மறுநாள் காலையில் தஞ்சமாலியத்திலிருந்து புறப்பட்டு நடுப்பகல் 10-30 மணிக்கு. சுங்கைக்குரூட்டுக்கு வந்து அங்கு ஒரு பெரிய எஸ்டேட்டில் இறங்கி அவ்வெஸ்டேட் மேனேஜர் திரு ராமகிருஷ்ண முதலியார் அவர்களாலும் மற்றும் அக்கம் பக்கமுள்ள ஜனங்களாலும் ரப்பர் பால் எடுக்கும் விதமும் அது பகுவம் செய்யும் விதமும் தனித்தனியாக பார்வை இட்டதுடன் கூலிகளின் மூலம் அவர்களது சுக துக்கங்களையும் தெரிந்து பிறகு திரு ராமகிருஷ்ணமுதலியார்ஜாகையில்விருந்து சாப்பாடு நடந்ததும் ஒரு மணிக்கு அங்கு திரு முதலியார் தலைமையில் ஒரு பெரிய கூட்டம் ஏற்பாடு செய்துதிரு ராமசாமியார் பல' 'தெய்வங்களும் அவைகளின் யோக்கியதையும்" என்பது பற்றி ஒரு நீண்ட உபன்னியாசம் எல்லோரும் சிரித்த வண்ணமாகவே இருக்கும்படி செய்தார் அக்கூட்டத்தில் தோட்டக்காரர்களால் அமர்த்தப்பட்ட ஒரு பார்ப்பன கதைசெய்யும் பாகவதரும் மற்றொரு மஜனை கோஷ்டியாரும் ஆஜராயிருந்து அவர்களும் சிறித்துக் கொண்டே இருக்தார்கள். ஜனங்கள் அவர்களைப் பார்த்துப் பார்த்துபின்னும் அதிகமாய்ச் சிறித்துக் கொண்டே இருந்தார்கள்.

## தெலுங்கான்சன்

அங்கிருந்து எல்லோரும் தெலுங்கான்சன் என்கின்ற ஊருக்குப் புறப்பட்டார்கள். அங்கு சென்றதும் இந்திய சங்கத் தலைவர் திரு. சங்கரலிங்கம் அவர்களாலும் மற்றும் பொது ஜனங்களாலும் வரவேற்று அவரது பங்களாவில் ஜாகை ஏற்பாடு செய்து சிற்றுண்டி அளித்து பல கனவான்களுடன் பேசிக் கொண்டிருந்தார்கள். அன்று இரவு கழிந்ததும் மறுநாள் காலையில் திரு, சங்கரலிங்கம் பிள்ளை அவர்களால் அழைத்துக் கொண்டு தெலுங்கான்கனைச்சுற்றி10,12மைல் தூரங்களிலுள்ள சில எஸ்டேட்டுகளையும் ரப்பர் பால் பக்குவம் செய்து சீமைக்கு அனுப்பும் பெரிய பாக்டரிகளையும் காட்டப்பட்டது. பகல் சாப்

(தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவில் சுயமரியாதை இயக்கம்

கிருஸ்தவ மதத்தில் மிகப் பற்றுக்கொண்டு பிரசித்தியும் செல்வாக்குமுள்ள கிருஸ்தவப் பாதிரியாயிருந்த டாக்டர் சார்லஸ் பிரான்சிஸ் பட்டர் என்பவரால் ஒரு புதிய இயக்கம் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. அது பெரிதும் நமது சுயமரியாதை இயக்கத்தை அனுசரித்தகொள்கைகளையே கொண்டிருக்கிறது. அதாவது:— அதை ஆரம்பித்த காலத்தில் அவர் சொன்னதாவது தனது இயக்கத்தில் மனித வாழ்க்கைக்கு பிரார்த்தனை, புரோகிதம் தீக்ஷை முதலியவைகள் கிடையாது. கல்யாண முதலிய காலங்களில் மந்திரங்கள், சடங்குகள் கிடையாது. என்பதாகச் சொல்லித்துவக்கினர். இவ்வியக்கப் பிரசாரத்திற்காக சில முக்கிய பட்டனங்களில் மண்டபங்கள் கட்டுகிறார். அவைகளில் ஒன்றாகிய நியூயார்க் மண்டபத்தைத் திறந்துவைத்த காலத்தில் தனது இயக்கத்திற்காக கட்டப்படும் மண்டபங்களில் கடவுள் பிரார்த்தனைகள் ஒன்றும் நடைபெறாது என்றும் ஏனென்றால் கடவுளைப் பற்றியபிரார்த்தனைகள் எல்லாம் கடவுளிடமிருந்து ஏதேனும் ஒரு நன்மை செய்யும் பொருட்டே செய்யப்படுவனவாகும் என்றும் அதற்கு ஆதாரமாய் சொல்லப்பட்டிருக்கும் வேதம் முதலிய புத்தகங்களில் சொல்லப்பட்டிருப்பவைகள் எல்லாம் கடவுளை மகிழ்விக்கச் சொல்லப்பட்டவைகளாகும் என்றும், கடவுளுக்கு நன்றிசெலுத்துவதற்காக இம்மாதிரி செய்யப்படுவது என்பது மூடத்தனமாகும் என்றும் சொல்லித் திறந்துவைத்தார்.

ஒப்புக்கொள்ளாதகொள்கைகள்

1. உலகத்தையும் மக்களையும்கடவுள் சிருஷ்டித்தார் என்பதையும்,
2. நரகம்சுவர்க்கம் என்பதானஇடங்கள்உண்டு என்பதையும்,
3. கடவுளை வணங்கி கடவுள்பிரீதியை சம்பாதிப்பதே மனிதன் கடமை என்பதையும்,
4. அறிவுக்குமேற்பட்டதேமதம் என்பதையும்,
5. மனித ன்பிறப்பினால் பாவி ஆனவன் என்பதையும்,
6. கடவுள் விதிக்குமனிதன் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்பதையும்,
7, குறிப்பிட்ட மதம்தான் உயர்ந்தது—உண்மையானது என்பதையும்
8. பாவ விமோசனம், மோட்சப் பிராப்தம், பிரார்த்தனை, ஆலய வழிபாடு முதலாகியவைகள் மனிதவாழ்க்கைக்குத் தேவையானவை என்பதையும்,
9. கடவுளால் நாம்ஆக்கவும்வாழவும் அழிக்கவும் படுகின்றோம் என்பதையும்

இப்புதிய இயக்கம் ஒப்புக்கொள்ளாமல் அவற்றிற்கு விரோதமாய் வேலைசெய்யும்

1. உலகமும் மனிதனும் இயற்கை வேறுபாட்டினால் ஏற்பட்டவைகளென்றும்
2. மனிதன்இயற்கை விதிகளுக்குக்கட்டுப்பட்டுநடக்கவேண்டும் என்றும்
3. நன்மை தீமையின் பலன்களை இவ்வுலகத்தில் அனுபவிப்பதைத்தவிர வேறில்லை என்றும்
4. எந்த விஷயமானாலும் அது அறிவுக்கு ஒத்திருக்கவேண்டும் என்றும்,
5. அறிவிற்கும் நியாயத்திற்கும் விரோதமானவைகள் எவை யாகினும்அவைகளை எதிர்த்து நிற்பதுடன் அவற்றின் மூலகாரணங்களை அழிக்கவேண்டும் என்றும்
6. மக்களுக்கு தொண்டுசெயவேண்டும்.என்றும்
7. வாழ்வுக்கும் தாழ்வுக்கு தானே பொருப்பாளியென்றும்.
8. எந்த மதக்கொள்கைகளும் அடியோடு ஒப்புக்கொள்ளவோ தள்ளிவிடவோ தக்கதல்லவென்றும்
9. கல்யாணத்திற்கு சடங்கும் ஆடம்பரமும் வேண்டியதில்லை.என்றும்
10. பெண்களுக்கும்ஆண்களுக்கும்சுயேச்சைக்கூட்டும் சுயேச்சைக்கொள்கையும் ஏற்படவேண்டும் என்றும்.

பெண்கள் பாருவடைய சொத்துமல்லஎன்றுடன் அவர்கள் தனி சுதந்திரமுடையவர்கள் என்றும் ஒப்புக்கொள்வதுடன் விவாக விடுதலையை எதிர்க்காமல் விவாக விடுதலை செய்துகொள்ளவேண்டிய அவசியம் ஏற்படாமல் இருப்பதற்கு வேண்டிய வேலைகள்செய்வதுமான காரியங்களை அமுலில் கொணடுவர பிரசாரம் செய்வதுமாகும்.

இவ்வியக்கத்தின் தத்துவத்தை சுருக்கிச் சொல்வதானால் கடவுள் பயத்தால அடிமைப்பட்டிருக்கும் மனதைவிடுதலைசெய்விப்பதே இவ்வியக்கத்தின்முக்கிய நோக்கம். மனிதனைசுதந்திரமனப்போக்குடையவனாகசெய்து விட்டால்தனக்கு இஷ்டமான கொள்கைகளை அவனவனே பின்பற்றத் துணிந்து விடுவான். என்பவைகள் இப்புதிய இயக்கக்கொள்பைகளாகும்.

### “சித்திரபுத்திரன்”

சைவன்:— அய்யா தாங்கள் இப்போது மலேயா நாட்டுக்குப் போய்வந்த பிறகு சைவமாய் விட்டீர்களமாமேவேஉண்மைதானா

வைணவன்:— ஆம் அய்யா நான் நாலுகால் பிராணிகளில் கட்டில், மேஜை, நாற்காலி ஆகிய வைகளையும், இரண்டுகால் பிராணிகளில் ஏணி வகைராவும் ஆகாயத்தில் பறப்பவைகளில் பட்டம், ஏரோபிளேன் வகைராக்களையும் நீரில் வாழ்பவைகளில் கப்பல் படகு கட்டுமரம் முதலியவைகளையும் பூமியில் நகருபவைகளில் வண்டி மோட்டார் கார் முதலியவைகளையும் நான் சாப்பிடுவதில்லை இவைகளைச்சாப்பிடுவது பாவம் என்று எனக்குப் பட்டதினாலும் சைனக்காரர்களைப் பின் பற்றுவதாலும் இம்மாதிரி முடிவு செய்துவிட்டேன்.

சைவன்— அப்படியா இது நல்ல சைவம் தான். எனக்குச் சற்று வேலை இருக்கின்றது சீக்கிரம் போகவேண்டும் நான் போய்விட்டு வருகிறேன். (என்று சொல்லிக்கொண்டே தன்னை எங்கு சாப்பிட்டு விடுவானோ என்று நினைத்து ஓடிவிட்டார்)

## மதுரை முனிசிபாலிட்டி
## டெண்டர் நோட்டீஸ்.

இந்த முனிசிபாலிட்டிக்குவிறகுசப்ளை செய்வதற்கு சீல் போட்ட டெண்டர்கள் தேவை. அந்த விறகு ரயில்வே, வேயிரிட்ஜுக்கு 3,மைல் தூரத்திலுள்ளகொச்சடை தண்ணீர் சப்ளை பம்பிங் ஸ்டேஷனில் ஒரு பாகமும்,ஒரு மைல் தூரத்திலுள்ள அரப்பாளையம் தண்ணீர் சப்ளை பம்பிங்ஸ்டேஷனில் ஒரு பாகமுமாக வாடகை யின்றி கொண்டுவந்துபோடவேண்டும்.

2. விறகுகள் நன்றாய்க் காய்ந்ததாயும், சேகேரியதாயும், இரண்டரை அங்குல குறுக்களவிற்குகுறையாததாயும், ஆறு அங்குலத்திற்கு அதிகப்படாததாயும், இரண்டு அடி நீளமுள்ளதாகவும் இருக்கவேண்டும்.

3. இதற்கு வேறுபட்ட அளவுள்ளதும் கனுவுள்ள மரமும் கண்டிப்பாய் தள்ளுபடி செய்யப்படும்.

4. 1930—31 அபிஷியல் வருஷத்திற்கு வேண்டிய விறகு அளவு கொச்சடை ஸ்டேஷனுக்கு 400- டன் என்றும், அரப்பாளையம் ஸ்டேஷனுக்கு 200டன் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. அந்தப்படி சப்ளை செய்வதில் அப்போதைக்கப்போது கொடுக்கப்படுகிற உத்திரவுப்படிகொஞசங் கொஞ்சமாய் சப்ளை செய்யவேண்டும்,

5. டெண்டர்தார்,டெண்டரின்மேல் “1930—31 ௵த்துக்கு விறகு சப்ளை செய்ய டெண்டர்” என்று தெளிவாய் எழுதி ரூ. 100 டிபாசிட் தொகையுடன்1930-௵ பிப்ரவரி-௴ 25-௳ மாலை 5 மணிக்குள், கீழ் கையொப்பமிட்ட எனக்குக் கிடைக்கும்படி அனுப்பவேண்டும். டெண்டர்தாருக்கு முனிசிபாலிட்டியினால் எவ்வளவு தொகை கொடுக்கப்படவேண்டியிருந்தாலும், எந்தக் காரணத்தைக் கொண்டும்அதை டிபாசிட்டுக்காகஉபயோகித்துக்கொள அனுமதிக்கப்படமாட்டாது, டெண்டர்கள் பைசல் செய்யப்பட்ட ஒரு வார வாய்தாவில் தேர்ந் தெடுக்கப்பட்ட டெண்டர்தார் மறுபடியும் ரூ,200 டிபாசிட்டு கட்டுவதோடு, தன்னுடைய சிலவில் ஒரு ஒப்பந்தப் பத்திரமும் எழுதிக் கொடுக்கவேண்டும். அப் பத்திரத்தின் நகல் ஆபீசில் கிடைக்கும். அந்தப்படி செய்யத் தவறினால்ஒப்பந்தம் ரத்து செய்யப்படுவதோடு டிபாசிட் தொகையும் பறிமுதல் செய்யப்படும்.

6, எல்லா டெண்டர்களையுமோ, அல்லது சிலவற்றையோ, யாதொரு காரணமும் காட்டாதுதள்ளிவிடுவதற்கு இந்த சபைக்கு பூரண அதிகாரம் உண்டு,ஏற்றுக்கொள்ளப்பட்ட டெண்டர்தார் விறகு சப்ளை செய்வதற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட ரசீது யெல்லாம் தனிக்கை செய்யப்பட்ட பிறகே டிபாசிட் தொகை வாபீஸ் செய்யப்படும்,

முனிசிபல் ஆபீஸ்,
28-1-30
மதுரை.

ஆர். எஸ். நாயுடு,
சேர்மென்.



"அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதா பேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன் றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே"

குடி அரசு

ஈரோடு 1930 பிப்ரவரி மீ 9-உ

## மலாயா பிரயாணம்.

மலாயா நாட்டுக்கு "சென்ற வருஷம்" டிசம்பர் மீ 15-உ கப்பலேறி "இவ்வருஷம்" ஜனவரி மாதம் 16 தேதி இந்திய நாடு சுகமே வந்து சேர்ந்தோம்— இந்த சுற்றுப் பிரயாணத்தில் மலாய் நாட்டில் நடந்த விஷயங்கள் ஒருவாறு சென்ற வாரப் பத்திரிகையிலும் இவ்வாரப்பத்திரிகையிலும் பிரசுரித்திருக்கும் மலாய் நிருபரின் சுற்றுப்பிரயாண நிருபத்தில் காணலாம்.

மலாய் பிரயாணத்தைப்பற்றி நாம் சிறிதும் நினைத்திருக்காத நிலையில் திரு. சாமி அற்புதானந்தா அவர்களால் எழுதப்பட்ட ஒரு கடிதம் வந்தது. அக்கடிதத்தில் மலாய் நாட்டில் சுயமரியாதை இயக்கக்கொள்கை உணர்ச்சி விசேஷமாய் பரவி வருகின்றதெனினும் சில விஷமக்காரர்கள் சுயாலத்தின் காரணமாய் இந்து மதத்தின் பேரால் தொல்லை விளைவிக்கின்றார்கள் எனவும், சுயமரியாதைக்காரர்களுக்கு "இந்துக்களைப்புதைக்கும் சுடுகாட்டில்கூட இடம்கொடுக்கக்கூடாது" என்று இந்து மத சங்கத்தில் தீர்மானங்கள் கொண்டு வந்ததாகவும், சுயமரியாதைக் கல்யாணங்களை சர்க்கார் ஒப்புக்கொள்ளக்கூடாது என்று விஷமம் செய்கின்றார்கள் எனவும் ஒரு முறை வந்துபோனால் மிக்க அனுகூலமாயிருக்குமென்றும் பொருள்பட எழுதியிருந்தார். இதைப் பார்த்ததும் அதுசமயம் போய்த்தான்பார்க்கலாமா என்பதாகஒருஎண்ணம் தோன்றியதால் இதுசமயம் சிறிது வேலை இருக்கின்றதென்றும், ஒன்று இரண்டு மாதம் பொருத்து வர முயற்சிப்பதாகவும் ஆனால் அங்குள்ள முன்னேற்றம் பத்திராதிபரையும் திரு. காளியப்பனையும் கலந்து அவர்களைக்கொண்டு எழுதும்படியும் பதில் எழுதினோம். இப்படியிருக்க ஒரு மாதம் கழித்து திடீரென்று 15 நாள் சாவகாசத்தில் புறப்படும்படி நிகழ்ச்சிக் குறிப்புடன் ஒரு கடிதம் வந்தது. அக்கடிதத்திற்கு வர முடியாது என்று எழுதியதுடன் அந்நிகழ்ச்சிக் குறிப்புகள் மற்ற பத்திரிகைகளுக்கும் அனுப்பப்பட்டதாய் தெரிந்ததால் அதை பிரசுரிக்கவேண்டாம் என்று தகவலும் அனுப்பிவிட்டோம். தவிர திருவாளர்கள் சாரங்கபாணி, காளியப்பன் இவர்கள் கடிதமும் இதை அனுசரித்து புறப்படும்படியாகவே கிடைத்தது. எல்லாவற்றிற்குமாக ஒரு நீண்ட தந்தி ஒன்றை சென்னையில் இருந்து "குடி அரசு" ஆபீசு ஈரோட்டிற்குமாற்றப்படவேண்டி இருப்பதற்காகவும் நாகர்கோவில் மகாநாட்டுக்காகவும் பார்ப்பனரல்லாதாருக்குள்ளாகவே கட்சிப் பிளவுதகாருகள் இருப்பதாலும் இது சமயம் கண்டிப்பாய் வருவதற்கு சௌகரியமில்லை என்பதாக தந்தி கொடுத்தோம் இதற்கு பதிலாக "6000 டாலர்கள் (பதினாயிரம் ரூபாய்கள்) செலவழித்துச் செய்த மகாநாட்டு ஏற்பாடுகளும் வரவேற்பு ஏற்பாடுகளும் வீணாய் விடும் வராவிட்டால் சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டவர்களுடைய நிலைமை நெருக்கடியாகி விடும்" என்று திருவாளர்கள் சாரங்கபாணியும் காளியப்பனும் தந்தி அடித்தார்கள்- அதைப் பார்த்த இவ்விடத்திய நமது நண்பர்கள் கண்டிப்பாய் போக வேண்டும் என்றும் இவ்விடத்திய காரியங்களை எல்லாம் தாங்கள் சரியாய்ப் பார்த்துக்கொள்ளுவதாகவும் சொன்னதோடு கைவல்லிய சாமியாரும் கண்டிப்பாய்போக வேண்டுமென்று சொன்னார்கள். இவைகளை அனுசரித்துப்போவதாக தீர்மானித்து ஒரு தந்தியை சிங்கப்பூருக்கு திரு சாரங்கபாணிக்கு கொடுத்து விட்டோம். அதற்குப் பதிலாக திரு. சாரங்கபாணி அவர்களால் நமது' வருகைக்கு அவ்விடம் இந்து சபையார் பெரிய எதிர்ப்பு செய்கிறார்கள் என்றும் அதனால் அவ்விடத்திய சர்க்கார் நம்மை கப்பல் விட்டு இரங்க அனுமதிக்க மாட்டார்கள்போல் இருக்கின்றதென்றும் இரங்க விட்டாலும் பேசவிடமாட்டார்கள் என்றும தகுந்த ஏற்பாட்டுடன் கண்டிப்பாய் வரவேண்டுமென்றும் தந்தி கொடுத்திருந்தார். இது டிசம்பர் மாதம் 9 தேதி கிடைத்த அதைப் பார்த்தபிறகு கப்பல் ஏறும்நாள் மிகசமீபத்தில் இருந்ததால் அதாவது 11 தேதியாயிருந்ததால் ஒன்றும் செய்யமுடியாமல் கவலைப்பட்டுக்கொண்டிருந்தோம். இந்த நிலையில் "மகாநாடு ஒத்திவைக்கப்பட்டு விட்டது கப்பல் ஏறவேண்டாம் கடிதம்பார்" என்பதாக மகாநாட்டு வரவேற்பு தலைவரான திரு அப்பாரு அவர்கள் பேரால் பினாங்கிலிருந்து ஒரு தந்தி கிடைத்தது. இதைப்பார்த்ததும் கஷ்டம் ஒழிந்தது என்று மெத்த சந்தோஷமாக இருந்தோம். ஆனால்இங்குள்ள நண்பர்களும் நமது தமையனாரும் இந்த தந்தி பொய்யாயிருக்குமென்றும் மறுபடியும் தந்தி கொடுத்து கேட்க வேண்டும் என்றும் சொன்னதால் மறுபடியும் இப்படி ஒரு தந்தி கிடைத்தது அது உண்மையா என்று கேட்டோம் அதற்கு பதில் "பினாங்கு தந்தி பொய் கண்டிப்பாய் புறப்படு பயணத்தை உறுதிப்படுத்து" என்று பதில் 11-ந்தேதி கிடைத்தது இதை பார்த்தபிறகு மறுபடியும் கவலை ஏற்பட்டது எனெனில் அவ்விடத்திய சர்க்கார் நம்மைகப்பலைவிட்டுஇரக்காமல் பாரிஸ்டர் திரு மணிலால் அவர்களை செய்ததுபோல்செய்துவிட்டால் நாம் என்ன செய்வது என்கின்ற கவலை தவிர வேறில்லை. இதன் பேரில் சென்னை அரசாங்கபிரதம அதிகாரிகளை கேட்கச் செய்ததில் அவர்கள் மலாய் அரசாங்கத்தில் தாங்கள் பிரவேசிக்க முடியாது என்றுஒரேவார்த்தையில்முடித்து விட்டார்களாம். பிறகு எப்படியானாலும் சரி இவ்வியக்கம் காரணமாகவந்ததை அனுபவிப்போம் என்றே புறப்பட்டோம். நாள் சுருக்கமாயிருந்ததால் 11 தேதி சென்னையில் கப்பலேர முடியாமல் 13-ந்தேதியே நாகைக்குபுறப்பட்டுஅங்கிருந்து 15-உகப்பலேறி விட்டோம்கப்பலில்கம்பிஇல்லாத தந்தி மூலமாய் பல வரவேற்பு தந்திகள் கிடைத்துக் கொண்டிருந்ததாலும் சற்று கவலையுடனேயே தான் கப்பல் பிரயாணம் செய்தோம். நாங்கள் பினாங்கு துறைமுகத்திற்கு 4 மைல் தூரத்தில் கப்பல் நின்று இருக்கும் போதே ஒரு வெள்ளைக்கார சாதாரண அதிகாரியும் மற்றொரு இராணுவ உடை தரித்த வெள்ளைக்கார அதிகாரியும் சில போலீசு காரரும் நம்மிடம் வருவதைப் பார்த்ததும், சரி "நமக்கு தடைவுத்திரவு வந்து விட்டது" என்று முடிவு செய்து கொண்டு மனதில் நம்மை அறியாமல் ஏற்பட்ட ஒரு வித திகிலுடன்முகத்தை மாத்திரம் சிரிப்பாகக் காட்டிக்கொண்டுநின்றோம். அவர்கள் இருவர்களும் கிட்ட வந்ததும் சலாம் செய்து ஒருவர் அசிஸ்டெண்ட் கண்ட்ரோலர் என்றும் மற்றவர் சார்ஜண்ட் என்றும் தாங்களே அறிமுகம் செய்து கொண்டார்கள். பிறகு பேச ஆரம்பித்ததும் என்னிடம் பேச வேண்டியவைகளை திரு. ராமநாதன் அவர்களிடம் சொல்லும்படி சொன்னோம். பிறகு அவர்பேசும் போதே ஒரு வித தைரியம் வந்தது அதற்குள் பினாங்கிலிருந்து சில சங்கத்து நண்பர்கள் வந்து ஒரு கடிதம் கொடுத்தார்கள் அதில் இதைப் பற்றிய காரியம் ஒன்றுமில்லாமல் நிகழ்ச்சிக்குறிப்பு இருந்ததால் அந்தக்கவலை நீங்கிவிட்டது. இதற்குள் மற்றொரு படகில் சாமி அற்புதானந்தா சுப்பிரமணியம் முதலியவர்களும் மற்றும் சில இந்து மகமதிய கனவான்களும் வருவதைப் பார்த்தோம் இரங்க விட மாட்டார்களோ என்று நினைத்த எண்ணம் போய் இவ்வளவு ஆடம்பரம் வேண்டாம் என்று சொல்லவேண்டிய நிலைமை வந்துவிட்டது. பினாங்கில் இரங்கியவுடன் பலவிதமான விஷயங்கள் காதுக்கு வந்தன அவற்றுள் ஒன்று நம்மை கத்தியால் குத்துவதற்கு ஒரு நபருக்கு 500 வெள்ளி பேசி ஏற்பாடு செய்திருப்பதாகவும் நாம் போகுமிடங்களிலெல்லாம் கலகம் செய்வதற்கும் துண்டு பிரசுரங்கள் போட்டு வழங்கிவருவதற்கும் 500 வெள்ளி பேசி பலரை நியமித்திருப்பதாகவும் மற்றும் கிருஸ்துவுக்கு விரோதமாய் பேசினதாகவும் சொன்னதாகவும் மகமது நபிக்கு விரோதமாய் பேசினதாகவும் இந்து மதத்தை ஒழித்து இந்துக்களை மகமதிய மதத்தில் சேர்ப்பிக்க மகமதியரிடம் பணம் வாங்கிக் கொண்டு மலாய் நாட்டுக்கு வருவதாகவும், பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு விரோதமாய் ஒத்துழையாமை பிரசாரம் செய்யவருவதாகவும் போல்ஷிவிசம்பிரசாரம் செய்ய வருவதாகவும் இன்னும் பலவிதமாக துண்டு பிரசுரங்கள் மூலமாகவும் பத்திரிகை மூலமாகவும் பிரசாரம் செய்திருந்தவிஷயம் நேரில்பார்த்தோம். தவிரவும் அவ்விடத்திய ஒரு ஆங்கில தினசரிப் பத்திரிகை அரசாங்கத்திற்கும் சட்ட சபை அங்கத்தினர்களுக்கும் நாம் பெரிய கலகக்காரரென்றும் நம்மை மலாய் நாட்டில் விட்டால் ஜனசமூகத்

தின் சார்த்குணம் கெட்டு சர்க்காருக்கு தொல்லை யேற்படுமென்னும் எச்சரிக்கை செய்வதாக ஒருவாரம் தவராமல் தலையங்கமும் உபதலையங்கமும் எழுதி வந்தது. இது நிற்க தமிழ் நேசன் பத்திரிகைக்காரரான ஒரு அய்யங்கார் ஊர் ஊராகச் சுற்றி பிரசாரம் செய்ததுடன் தனது பத்திரிகையில் கடவுளுக்கும் மதத்துக்கும் ஆபத்து என்று தினப்படி எழுதிக்கொண்டே வந்தது. தவிர இவ்வளவும் போதாமல்திரு வரதராஜுலு நாயுடுவின் பேப்பரும் மருந்தும் விற்கும் ஆள்களும் கூலிகளும் விஷமப் பிரசாரம் அதாவது தோட்ட கூலிகளை கிளப்பிவிட்டு தோட்டக் காரருக்குதொல்லை விளைவிப்பான் இவன்காந்தி மனிதன் என்றும் சொல்லி வந்தார்களாம்: மற்றும்ஒரு விசேஷம். அதாவது இந்துமகா சபைத் தலைவர், அவ்வூர் போலீஷ் கமிஷனரிடம் ஒரு விண்ணப்பம் கொடுத்துப் பேசுகையில் இந்தியாவிலிருந்து வரும் ஈ. வெ. ராமசாமி என்பவர் எங்கள் கடவுளான இராமரை விவசாரத்தில் பிறந்தவன். என்று சொல்லுகின்றார், ஆதலால் அவரை இங்கே வர விடக்கூடாது, என்றாராம். அதற்கு அந்தப் போலீஷ் கமிஷனர் "அதற்குநாம் என்ன செய்யலாம். எங்கள் வெள்ளைக்காரர்களில் சில பேர் ஏசுகிருஸ்துவையும் இப்படித்தான் அதாவது அவர் தாயார் விவாகமாவதற்கு முன் அவரைப் பெற்றதால் விவசாரத்தில்தான் பிறந்து இருக்கவேண்டுமென்று சொல்லுகின்றார்கள். ரேட்டால் சைன்சு படி 4குஒரு ஆள் கூடாமல் எப்படி பிள்ளை பிறக்கும் என்கின்றார்கள். ஆகவே மத விஷயங்களில் இப்படிப்பட்ட அபிப்பிராயங்கள் ஆயிரக்கணக்கான வருஷங்களாகவே இருந்து வருகின்றது அதற்காக யாரையும் தூக்கில் போட முடியாது" என்றும் சொன்னாராம். இப்படியாகப் பல விதத்திலும் எதிர்ப் பிரசாரங்கள் செய்தார்கள், என்பது மாத்திரம் நமது காதுக்கு எட்டியதேதவிர காரியத்தில் பலன் ஒன்றும் காண முடியவே இல்லை. தமிழ் நேசன் பத்திராதிபர் ஒரு அய்யங்கார் சர்க்காரார் நம்மை மலாய் நாட்டில் இரங்கக் கூடாதென்று உத்திரவு போட்டுவிட்டதாக கட்டுக் கட்டி விட்டதால் அதை நம்பி அனேகம்பேர் கப்பலிலிருந்து நாம்இரங்கமாட்டோம் என்று நினைத்துக் கொண்டு இரங்கினால் குத்திவிடுவதாயும் கலகம் செய்வதாயும் பேசி விட்டார்கள், நாம் பினாங்கில் இரங்கியதும் அங்கு துறைமுகத்தில் ஜனங்கள் நடந்துகொண்டதை பார்த்தபிரகுதான் யாரும் எவ்வித எதிர்ப் பிரசாரமும் செய்யாமல் இருந்துவிட்டார்கள்.

நிற்க, எதிர்ப் பிரசாரம் செய்வதற்குஏற்பட்டகாரணங்கள்என்ன என்று பார்த்தில், பினாங்கில் இந்து மகா சபை என்று ஒரு சபை இருப்பதாகவும் அதை சர்க்கார் இந்துக்களுடைய பிரதிநிதி சபை என்று ஏற்றுக்கொண்டிருப்பதாகவும் அச் சபைப் பிரமுகர்களுக்கு அங்குள்ள இந்துக்களால் சில மரியாதைகளும் வரும்படிகளும் இருப்பதாகவும் நமது இயக்கத்தால் அவற்றிற்கு மரியாதை குறைந்துவரும்படி குறைவதாகவும் அதனால் நமது இயக்கத்திற்கு விரோதமாய் வேலை செய்யவேண்டி வந்ததாகவும் தெரிய வந்தது. ஆனால் அந்த இந்து மகா சபையில் இந்துக்கள் என்பவர்களிலேயே பல வகுப்பாரை அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளுவதில்லை, என்கின்ற நிபந்தனை உண்டு. அதாவது ஆதி திராவிடர்கள், மருத்துவர்கள் முதலியவர்களை மாத்திரமல்லாமல் சமீப காலம்வரை நாடார்களையும் சேர்க்க மறுத்து வந்தார்களாம். முதல் முதலில் நாடார்களைச்சேர்க்கும்போதும் அதிகமான பணம் கொடுத்ததால் தான் சேர்த்தார்களாம். இந்த யோக்கியதையுள்ள இந்துமகா சபை கெட்டுப் போகுமென்று சிலர் சத்தம் போட்டதால்தான் அதை யாரும் அந்நாட்டில் மதிக்கவில்லை. தவிர தமிழ்நேசன் அய்யங்கார்நாம்போகும் ஒவ்வொரு ஊருக்கும் முதல் நாள் போய் வரவேற்புக்கு எவ்வளவோ இடையூறு செய்து கொண்டு போனதாக அனேகமாய் ஒவ்வொரு ஊர்களிலும் பிரஸ்தாபம் வந்து கொண்டே இருந்தது. இது தவிர மலாய் நாட்டில் உள்ள சங்கங்களில் எதில் எதில் பார்ப்பனர்கள் அங்கத்தினர்களாக இருந்தார்களோ அதிலெல்லாம் வரவேற்புக்கும் பத்திரத்திற்கும்கூடியவரை எதிர்ப்புகள் செய்து பலமான தோல்விகள் அடைந்ததுடன் இரண்டொரு சங்கத்தில் இது விஷயமாய் செய்த விஷமத்திற்கு பார்ப்பனர்களிடம் மன்னிப்புக் கடிதம் வாங்கியிருந்ததைஎங்களுக்குக் காட்டினார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் நமது மலாய் நாட்டு சுற்றுப் பிரயாணம் நாம் எதிர்பார்த்ததற்கு மேலான அளவு வெற்றிகரமாகவே முடிந்தது. மகமதிய கனவான்களும் கிருஸ்தவ கனவான்களும் அவர்களில் ஐரோப்பியர்களும் மற்றும் இந்து கனவான்களும் இந்த சுற்றுப் பிரயாணத்தில் சிறிதும் வித்தியாசம் பாராட்டாமல் எல்லோரும் கலந்துகொண்டதும் வகுப்புவாரிபிரதிநிதித்துவம் போல் தலைமை வகித்து உபசாரங்கள் செய்ததும் நடவடிக்கைகளைப் பார்த்தால் நன்றாய்த் தெரியவரும். திருவாளர்கள் சுவாமி அற்புதானந்தர், கே. சுப்பிரமணியம், காளியப்பன்' அய்யாரு சாரங்கபாணி ஒ. ராமசாமி நாடார், கோவிந்தசாமி, தாமோதிரம், பழனியப்ப செட்டியார், ஜனாப்புகள் முகம்மது ராவுத்தர், சீனி ராவுத்தர், முகம்மது யூசுப் முதலிய கனவான்கள் சிங்கப்பூரிலும் பினாங்கிலும் செய்த ஏற்பாடுகள் மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். இந்த இரண்டு ஊர்களில் மாத்திரம் 7500-ரூபாய்க்கு மேலாகவே செலவு செய்து இருக்கின்றார்கள் எவ்வளவு சொல்லியும் அவர்கள் சிறிதும் லட்சியம் செய்யாமல் எதிர்ப் பிரசாரக்காரர்களுக்கு புத்தி கற்பிக்க வேண்டுமென்கின்ற காரணத்தைச் சொல்லிக் கொண்டே வீண் செலவு செய்தார்கள். எனவே நமது மலாய் நாட்டு சுற்றுப்பிரயாணம் வெற்றிகரமாக முடிந்தது என்பது வாசகர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவிப்பதுடன் மலாய் நாட்டிலுள்ள இந்திய சகோதரர்களுக்கு நமது மனமார்ந்த நன்றியறிதலை செலுத்துகின்றோம். இந்திய கூலிகள் விஷயமாகவும் இந்திய பிரதிநிதித்துவ விஷயமாகவும் பின்னால் எழுதுவோம்.

---

## ருஷியாவில் சுயமரியாதை தாண்டவம்.

### மதப்பிரசாரம் செய்ததற்கும் வேதம் கற்பித்ததற்கும் தண்டனை.

ருஷ்யாவில் ஒரு இளவாசியார் மதப்பிரசாரம் செய்ததற்காகவும் தொளிளாளர் குழந்தைகளுக்கு கிறிஸ்தவ வேதம் கற்பித்ததற்காகவும் ருஷிய அரசாங்கத்தாரால் ராஜத்துரோகம் என்று கருதி கைது செய்யப்பட்டிருக்கிறார் என்று "பாரத கிருஸ்தவ வர்த்தமானி"யில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. நமது நாட்டிலும் இப்படிப்பட்ட காரியம் துவக்கப்படுமானால் சுயநல மதமும் வஞ்சக வேதங்களும் ஆபாசப்புராணங்களும் உடனே ஒழிந்து மக்கள் சீக்கிரத்தில் சுயமரியாதை அடைவார்கள்.

---

## சுயமரியாதை திருமணம்.

சிவகங்கை திருவாளர் எஸ். வி. ஆர். நாராயணசாமி சேர்வை அவர்களின் திருச்செல்வன் என். சொக்கலிங்கத்துக்கும், திருவாளர் க. நு, சுப்பய்யா சேர்வை அவர்களின் திருச்செல்வி திருமதி சிவசுந்திரம் அம்மாளுக்கும் சொக்கனாதபுரத்தில் பிப்ரவரி மீ 9உ ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பார்ப்பனப் புரோகிதமொழிந்த சுயமரியாதை திருமணம் நடைபெறுமென்றும் அவ்வமயம் திருவாளர் சௌவுந்திரபாண்டியர் முதலிய சுயமரியாதை தலைவாகள் விஜயம் செய்வார்களென்றும சிவகங்கை வாலிப சங்கத்தலைவர் திருவாளர் எல். ஆர். எம். வெங்கிடாசம் அவர்கள் தந்தி மூலம் அறிவிக்கிறார்.

## கோவை வைக்கம்வீரர் வாசகசாலை

நண்பர்களே நமது வாசகசாலை சற்று இடவசதி குறைவாக இருப்பதால் வேறொரு இடத்திற்கு மாற்ற உத்தேசித்திருந்தது. நம் நண்பர்கள் அறிந்த விஷயமே. ஆனகயால் ஒவ்வொருவரும் தாமதம் செய்யாமல் முயற்சியெடுக்கும்படி வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்,

புதிதாகத் திறக்கும் வாசகசாலையில் நமதியக்கப் பெரியாரின் திருவுருவப் படத் திறப்பு விழாவும் நடத்த உத்தேசித்திருப்பதால் காலதாமத யன்னியில் தகுக்த முயற்சியும் கூடியவரை பண உதவியும் செய்யுமாறு வேணடிக் கொள்ளுகிறேன் என் றுகாரியதரிசிகே. சிவப்பிரகாசம் எழுதுகிறார்.

## சுயமரியாதை மகாநாடு ஈரோடு.

ஈரோட்டில் நடக்கும் 2-வது மாகாண சுயமரியாதை மகா நாட்டுக்கு இதுவரை ரூ. 2000 வசூலாகி இருக்கின்றது,

வசூல் விபரம்.

ஈரோடு மண்டி

| | | |
|---|---|---|
| ,, அ. கோ. ராமசாமி | ரூ. | 500 |
| ,, ஈ. எம். சிக்கைய | ,, | 500 |
| ,, அ. ரங்கசாமி பிள்ளை | | 400 |
| ,, சா. ராமசாமி | | 500 |
| ஆக | ரூ. | 1900 |

மகாநாட்டுப்பந்தல் ஈரோடு ரயில்வே ஸ்டேஷனுக்கு அடுத்த சமீபத்தில் ஈ. வெ. கி. அவர்கள் தோட்டத்தில் போட ஏற்பாடுகள் நடந்து வருகின்றது.

## கரூர் தாலூகா கிராம முன்னேற்ற மகாநாடு.

15-12-29-ந் தேதியில் உயர் திருவாளர் திருச்சி ஜில்லாபோர்டு பிரசிடேண்டு டி. எம். நாராயணசாமி பிள்ளை அவர்கள் தலைமையில் நடந்தது.

## மதுரை முனிசிப்பாலிட்டி

# டெண்டர் விளம்பரம்

1930—31-ம் வருடத்தில் இந்த முனிசிப்பாலிட்டியின் உபயோகத்துக்காக நிலக்கரி சப்ளை செய்வதற்கு முத்திரை வைத்த டெண்டர்கள் தேவை. மிகவும் உயர்ந்த நிலக்கரியாக இருக்கவேண்டும். அலிப்பூர் கவர்ன்மெண்ட் டெஸ்ட் ஹவுசிலிருந்து சமீபத்தில் கிடைத்த ரசாயன ஆராய்ச்சி சர்ட்டிபிக்கட் டெண்டருடன அனுப்பவேண்டும். நிலக்கரி தூசியில்லாதாக துப்புரவு செய்யப்பட்டு ரயுல்வே வெய்பிரிட்ஜிலிருந்து சுமார் 3 மைல் தூரத்திலுள்ள கோச்சடையிலும், ஒரு மைல் தூரத்தில்ள ஆரப்பாளையத்திலுள்ள இரண்டு வாட்டர் வொர்க்ஸ் பம்பிங் ஸ்டேஷன்களிலும் கொண்டுபோய் டெலிவரி செய்யப்படவேண்டும்.

வருடம் முழுவதுக்கும் கோச்சடை ஸ்டேஷனுக்கு ஏறக்குறைய 700 டன் நிலக்கரியும் ஆரப்பாளையத்திலுள்ள ஸ்டேஷனுக்கு 400 டன் நிலக்கரியும் வேண்டியதாயிருக்கும்.

டெண்டர்களில், "1930—31-ம் வருடத்துக்கு நிலக்கரி சப்ளைக்கான டெண்டர்கள்" என்று மேற் குறிப்பு எழுதி ரூ. 100 கட்டணத் தொகையுடன்25-2-30 மாலை 5-மணிக்கு முன்கிடைக்கும்படிகீழ்கையொப்பமிட்டவருக்குஅனுப்பவேண்டும். முனிசிப்பாலிட்டியிலிருந்து எந்த டெண்டர்தாரருக்காவது பணம்சேரவேண்டியதாயிருந்தால், கட்டணத்தொகையாக வைத்துக்கொள்ள ஒப்புக்கொள்ளபடமாட்டாது. ஒப்புக்கொள்ளப்பட்ட டெண்டர்தார் டெண்டர் ஒப்புக்கொள்ளப்பட்ட பதினைறு தினங்களுக்குள் மேற்கொண்டு ரூ. 300 கட்டணத்தொகையாகச் செலுத்தி தமது சொந்த செலவில் இந்த ஆபீசிலிருந்து கொடுக்கப்படுகிற டிராப்ட் படி ஒரு கான்ட்ராக்ட் ஒப்பந்தம் எழுதிக்கொடுக்க வேண்டும். அந்த ஒப்பந்தப்படி செய்யத் தவறினல் கட்டணத் தொகை பறி முதல் செய்யப்படுவதுடன் காண்ட்ராக்ட்டும் ரத்துக் செய்யப்படும்.

எந்தடெண்டரையாவது அல்லது எல்லா டெண்டர்களையுமாவது காரணம் சொல்லாமலே தள்ளுபடி செய்ய கவுன்சிலுக்கு உரிமையுண்டு. ஒப்புக்கொள்ளப்பட்ட டெண்டர்தாரின் கட்டணத் தொகை ஷை சப்ளைக்காக பணங் கொடுக்கப்பட்டதற்குள்ள ரசீதுகளை ஆடிட்டர் பரிசிலனை செய்த பிறகு தான் திரும்பக் கொடுக்கப்படும்.

(ஒப்பம்) ஆர். எஸ். நாயுடு,
முனிசிபல் சேர்மன்.

முனிசிபல் ஆபீஸ,
மதுரை 27-1-30

## வட ஆர்க்காடு ஜில்லா 11-வது கூட்டுரவு

வாணியம்பாடியில், கோவை உயர்திரு ஆர். கே. சண்முகம் எம். எல். ஏ. அவர்கள் தலைமையில் நடந்தது. உயர்திரு டி.. கரிய கவுண்டர் அவர்கள் வரவேற்புத்தலைவராயிருந்து ஒரு அரிய உபன்யாசம் செய்தார். மகாநாடு வெகு சிரப்பாய் நடந்தது.

## திண்டுக்கல் தேவாங்ககுல வாலிபர் சங்கம் ஆண்டு விழா.

திண்டுக்கல் தேவாங்ககுல வாலிப சங்க 2-வது ஆண்டு விழா தை-மீ 6-உ ஞாயிற்றுக்கிழமை உயர் திரு ஆர். சுப்பிரமணியம் பி. ஏ.. பி. எல். அவர்கள் தலைமையில் நடந்தது.

## நாடார் மகாஜன சங்கம் மதுரை 4000 ரூபாய்

திருவாளர் ஊ, பு, அ, சௌந்திரபாண்டியர் எம், எல், சி, அவர்கள் திருவாளர்கள் பா, ம. பாண்டிய நாடார், சூ, அ, முத்து நாடார். எ, எம், எஸ் அண்ணாமலை நாடார் முதலியவர்களுடன் இலுப்பையூர், திருச்சுளி, கல்லூரணி, அருப்புக்கோட்டை ஆகிய ஊர்களுக்குச் சென்று அவ்வவ்வூர் பிரமுகர்களால் ஆடம்பரமாக வரவேற்கப்பட்டதுடன் சுமார் 4000 ரூபாய் வரையில் லாட்டரி சீட்டுவிற்கப்பட்டது, 9-ந் தேதி வாக்கில்தூத்துக்குடி,ஏரல் முதலியஇடங்களுக்கும்சென்றுமற்றும் திருநெல்வேலிஜில்லா முழுவதும் சுற்றுப் பிரயாணம்செய்வார்கள்,

## ஈரோடு டி. மு. கோர்ட்டு.

S. C. 1690/29.
I. A. 25/30.

மாரிமுத்து முதலி—வாதி.

ஈரோடு கிருமம் சுப்ப நாயக்கன் வலசிலிருக்கும் சின்னுக் கவுண்டன் மகன் முத்துக் கவுண்டன்—2-ம் பிரதிவாதி.

இதனால் மேற்படி 2-ம் பிரதிவாதிக்கு தெரிவிக்கிறது என்னவென்றால்:—

மேற்படி நெம்பரில் வாதி, எண்டார்சு பெற்ற பிரும்சரிபேரில் செய்திருக்கும் தாவா (7-3-30) மார்ச்சு மாதம் 7-ந் தேதி வாய்தாப்போட்டிருக்கிறது. அன்றையதினம் நேரிலாவது, வக்கீல் மூலமாயாவது உனக்குள்ள ஆக்ஷேபணைகளைத் தெரிவித்துக்கொள்ளாவிடில் ஒரு கக்ஷி செய்து தீர்ப்பு பெற - கோறப்படுமென்பதை இதன்மூலம்தெரிவித்திருக்கிறது.

C. P. ராகவேந்திர ராவ்,
வாதி வக்கீல்
8 2 30.

## டோல் கேட்டுகள் பரிசல் துறைகளின்

# ஏல விளம்பரம்.

1930 ஸ்ரீ ஏப்ரல் மீ 1 உ முதல் 1931 ஸ்ரீ மார்ச்சு 31 உ வரை திருச்சினப்பள்ளி ஜில்லா டோல் கேட்டுகளிலும் பரிசல் துறைகளிலும் சுங்கம் வசூல் செய்யும் சுதந்தரத்தை அடியிற்கண்ட தேதிகளிலும் ஜாகாக்களிலும் பகிரங்கமாய் ஏலம் விடப்படும்.

வேறு விவரங்கள் தேவையானல் திருச்சி ஜில்லா போர்டு பிரசிடெண்டு அவர்களுக்கு எழுதி தெரிந்து கொள்ளவும்.

| | ஏல தேதி | ஜாகா |
|---|---|---|
| 1. டோல் கேட்டுகளின் ஏலம் | 22—2—1930 | திருச்சி ஜில்லா போர்டு ஆபீஸ் |
| 2. திருச்சி லால்குடி தாலூகாகளின் பரிசல் துறைகள் | 20—2—1930 | ஷை |
| 3. கரூர் தாலூகாவிலுள்ள பரிசல் துறைகள | 25—2...1930 | அமராவதிபாலத்தடியிலிருக்கும் ரெஸ்டு செட்டு |
| 4. குழித்தலை தாலூகாவிலுள்ள ஷை | 27—2—1930 | குளித்தலை ஹைஸ்கூல் |
| 5. உடையார் பாளையம் தாலூகாவிலுள்ள ஷை. | 5—3—1930 | அரியலூர் தாலூகா போர்டாபீஸ் |

(ஒப்பம்)
நாராயணசாமி பிள்ளை,
பிரசிடெண்டு.

ஜில்லா போர்டாபீஸ்
திருச்சினபள்ளி

உயர்வும் உத்திரவாதமுமுள்ளது!

உலகப் பிரசித்தி பெற்ற

**மாயவரம் S.R. கிருஷ்ண அண்டுகோ.**

ஸத்குரு சிங்கச் சந்தனதித் தைலம் பிருங்காமலகத் தைலம்
அரைக்கீரை விதைத் தைலம்.

முதலியவைகளே! உங்கள் கண்ணுக்கும் மூளைக்கும்குளிர்ச்சியைத் தந்து திரேக ஆரோக்கியத்திற்கு குணம் தரத்தக்கது.

இவைகளைப் பல வருஷங்கள் அநுபவமுடைய தேர்ந்த நிபுணர்களால் உயர்ந்த பச்சிலை மூலிகைகளைக் கொண்டு ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

இவைகளை ஸ்நானம் செய்து வருவதால் சிரசைப்பற்றிய நோய்களைப் போக்கி திரேகத்திற்கு குளிர்ச்சியையும், நருமணம்புகம்பும் சுகந்த பரிமள வாசனையையும் கொடுக்கத்தக்கது.

அநேக பெரிய மனிதர்களாலும், டாக்டர்களாலும், பத்திரிகாசிரியர்களாலும், தேசிய மாபெரும் தலைவர்களாலும் உபயோகித்துச்சிபார்சு செய்யப்பட்டவை.

ஒரே முறை பரீட்சியுங்கள், பரிட்சைக்கு உத்திரவாதமுள்ளது.

மலாய் நாட்டில் கிடைக்குமிடம்:—
பி. கோவிந்தசாமி பிள்ளை,
48-50, சிரங்கன் ரோடு,
சிங்கப்பூர்.

ஆர். சந்தானகிருஷ்ணன்
ஷாப் அண்டு சந்தனக்கடை,
மாயவரம்.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடு நடந்ததும் மாலை 4-30 மணிக்கு தெருங்கான்கன் இந்திய சங்கத்தில் பொது ஜனங்களால் அழைக்கப்பட்டு ஒருபெரிய டிபார்ட்டி நடத்தப்பட்டது. பிறகு திரு. சங்கரலிங்கம் அவர்கள் தலைமையில் ஒரு பெரிய கூட்டம் கூட்டப்பட்டு திரு. ராமசாமியாருக்கு அந்தச் சங்கசார்பாக ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. பிரகு திரு. ராமசாமியாரால் 2-மணி நேரம் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி பிரசங்கம் செய்யப்பட்டு திரு. ராமநாதன் அவர்கள் ஆங்கிலத்தில் ஒருஉபந்நியாசம் அரை மணி நேரம் செய்து பிரகு சுவாமி அற்புதானந்தர் அவர்கள்ால் இந்தியில் ஒரு பிரசங்கம் செய்யப்பட்டு தலைவர் முடிவுரையுடன் கூட்டம் முடிந்தது.

### 7—1—30 கம்பார்.

மறுநாள் காலை 7-மணிக்கு காலை சிற்றுண்டி அருந்திவிட்டு திரு. ராமசாமியாரும் கோஷ்டியும் 8-மணிக்கு கம்பாருக்கு வந்து அங்கு திரு. சுப்பையா பிள்ளை அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு பொது காலை விருந்து சாப்பிட்டுவிட்டு சற்றுநேரம பேசி வந்தனமளித்துவிட்டு நேரே

### ஈப்போ.

ஈப்போவுக்குப் பகல் 11-மணிக்கு வந்து சேர்ந்தார்கள்; அங்கு திரு. தங்கவேலு முதலியார் அவர்கள் வீட்டில்ஒருபலமானவிருந்து செய்யப்பட்டிருந்தது. அதற்கு ஈப்போ பிரமுகர்கள் பலர் வந்திருந்தார்கள். விருந்து முடிந்ததும் வந்தனோபசாரங்கள் வழங்கியபின் ஒரு புகைப்படமெடுக்கபட்டது. பிரகுஒன்றரைமணிக்குரயில் மார்க்கமாகப்புறப்பட்டு5-மணிக்குபுக்கட்மர்ட்ட ஜான்வந்து சேர்ந்தார்கள். அங்கு ரயில் ஸ்டேஷனுக்கு வந்ததும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் பிளாட்பாரத்தில் கூட வந்திருந்தவர்களுடன் வரவேற்று மாலை போட்டு மோட்டார்காரில் இந்திய சங்க விளையாட்டு மைதானத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். அங்குசென்றதும் ஒரு புகைப்பட மெடுக்கப்பட்டது. பிரகு அம் மைதானத்தில் பொது ஜனக்களுக்கு ஆங்கில முறையில் ஒரு பெரிய டிபர்ர்ட்டி நடந்தது. விக்கப்யட்ட்து. அந்த டிபார்ட்டிக்குஅனேகஆங்கிலேய சீனகனவான்களும் ஆங்கிலேயசீனசீமாட்டிகளும் இந்திய சீமாட்டிகளும் வந்திருந்ததோடு ஜில்லாக் க்லெக்டர் முதலியவர்களும் மற்றும் பொது அதிகாரிகளும் சீன ஜப்பான் கனவான்களும் அழைக்கப்பட்டு சுமார் 500-பேர்கள் வரை வந்திருந்தார்கள். சிற்றுண்டி விருந்து முடிந்ததும் ஊர்வலமாக வாத்தியங்களுடன் னேஷனல் தியேட்டர் என்னும் பெரிய சினிமா மேடையில் சுமார் நாலாயிரம் ஜனங்களுக்கு மேலாக மேடையில் இரண்டு மாடிகளிலும் மற்றும் சுற்றுப் புரங்களிலுமாமாகக் கூடி யிருந்தார்கள். பெரிய வெட்டர்னி சர்ஜன் திரு. எ, ஆர், குப்புசாமி அவர்கள் தலைமையின் கீழ் ஓர் வரவேற்புப் பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. திரு.ராமசாமியார் அதற்குபதில் கூறுமுகத்தான் 2-மணி நேரம் தங்கள் இயக்கம் என்பது பற்றி பேசினார். பிரகு ராமநாதன் அவர்கள் ஆங்கிலத்தில் பேசினார். தலைவர் முடிவுரையுடன் 9 மணிக்குக் கூட்டம் கலைந்தது. பிரகு இரவு பத்து மணிக்கு ஊர் விருந்து ஒன்று நடந்தது.

### 8—1—30 பினங்கு.

பிரகு மறுநாள் காலையில் திரு. குப்புசாமி அவர்கள் வீட்டில் சிற்றுண்டி நடந்தவுடன் கார்களில் நேரே காலை 9-மணிக்கு பினங்கு வந்து சேர்ந்தார்கள். பினங்கு துறைமுகத்தில் ஏராளமான ஜனங்கள் வந்து ஒரு மணி நேரம் காத்திருந்து திரு. ராமசாமியார், திரு. மதி நாகம்மாள் திரு. ராமநாதன் முதலியவர்களுக்கு பலர் மாலை போட்டு பெருத்த ஆரவாரத்துடன் வரவேற்று ஜனப் முகம்மது ராவுத்தர் அவர்களது தோட்ட பங்களாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு உயிர்ஜெந்துக்கள் காலேஜூக்கு அழைத்துச் சென்று பார்வையிடச்செய்தார்கள். பிறகுஒருபெரியவிருந்துநடந்தது.பகல் விருந்து முடிந்தவுடன் மலைமேல் செங்குத்தாக ஏரும் மின்சாரரயில் பிரயாணம்செய்துபார்க்க அழைத்துச்சென்றுஅங்குரயிலேரி மலை உச்சியில் இரங்கி சிற்றுணடி வழங்கப்பட்டது. பின்னர் மாலை 5 மணிக்கு பினங்கு இந்திய சங்கத்தாரால் மைதானத்தில் கூட்டப்பட்டிருந்த ஒரு பெரிய கூட்டத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். கூட்டத்திற்கு ஜனப் முகம்மது ராவுத்தர் அவர்கள் தலைமை வகித்தார். அப்பொழுது பினங்கு இந்திய சங்கத்தாரால் ஒரு வரவேற்புப் பத்திரமும் செந்தமிழ் வாலிப சங்கத்தாரால் ஒரு வரவேற்புப் பத்திரமும் வாசித்துக் கொடுக்கப்பட்டது. திரு. ராமசாமியார் அதற்கு பதில் கூறிவிட்டு தாங்கள் மலேயா நாட்டிற்கு வந்ததின் நோக்கமும்இந்தியமக்கள்கடமையுயும் என்பதுபற்றி 3-மணி நேரம் ஒரு உபந்நியாசம் செய்தார். திரு. ராமநாதன் ஆங்கிலத்தில் அதே பொருளைப் பற்றிப் பேசினார். கூட்டதிற்கு பல ஐரோப்பியர்களும் சீனர்களும் கூட வந்திருந்தார்கள். பிரகு தலைவர் முடிவுரை கூறியதும் சங்கக் காரியதரிசி ஜனப் மொய்தீன் அவர்கள் வந்தனோபசாரம் சொல்ல கூட்டம் முடிந்தது.

### 9—1—30

மறுநாள் காலை சிற்றுண்டி நடந்தது. அங்கிருந்து திரு. ராமசாமியார் திருமதி நாகம்மாள், திரு. ராமநாதன், திரு. சுப்பிரமணியம் ஆகியவர்கள் 60 மைல் சுற்றளவுள்ள பினங்குத் தீவு முழுவதையும் சுற்றிப் பார்ப்பதற்கு ஆக மோட்டாரில் புறப்பட்டு ஒன்றரைமணி நேரத்தில் 50-மைல் தூரம் சுற்றிப்பார்த்துவிட்டு வந்துசேர்ந்தார்கள். பிரகு அன்று பகல் பினங்கிப் ஆனரபிள் நம்பியார் மருமகன் பாரிஸ்டர் ராகவன் அவர்கள் வீட்டில் ஆங்கில முறைப்படி ஒரு விருந்து ஏற்பாடு செய்திருந்தபடி அவ்விருந்துக்கு எல்லோருமாகச் சென்றுவிட்டு உடனே போட்டுக்குச் சென்று பட்டர்வொர்த்துக்குப் போய் அங்கிருந்து கிடா சமஸ்தானத்தைச் சேர்ந்த சுங்கப்பட்டாணிக்கு அழைத்துச் செல்லுவதற்கு வந்திருந்த கனவான்களுடன் சுங்கப்பட்டாணிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு கிடா இந்திய சங்கத்தாரால் ஒரு பொது டீ பார்ட்டி நடந்தது. அது முடிப்பதும் அவ்வூர் நாடக மேடையில் திரு. லூவன்ல அவர்கள் தலைமையில் ஒரு பெரிய கூட்டம் கூட்டப்பட்டு தலைவர் திரு. ராமசாமியாரைப்பற்றித்தான் அவரை இந்தியாவில் நன்ருய் அறிவாரென்றும் சமீபத்தில்தான் தான் இந்தியாவிலிருந்து வந்ததாகவும் அவரது இயக்கம் இந்தியாவில் எல்லா மாகாணங்களிலும் காட்டு தீ போல் பரவிவருவதாகவும் யார் என்ன கேள்வி கேட்டாலும் இக் கூட்டத்தில் பதில் சொல்லப்படும் என்றும் பேசினார். பிரகு இந்திய சங்கத்தாரால் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. அதற்குப் பதில் சொல்லிவிட்டு மதத்தின் பேராலும் கோவில்களின் பேராலும் இந்தியாவுக்கு ஏற்பட்ட தீங்கு என்பது பற்றியும் அவை இரண்டையும் அலட்சி செய்தநாட்டுமக்களுடையநாடுகளின்நிலைமை என்பதைப்பற்றியும்வெகுவிரிவாகக்கேள்விகேட்பதுபோலவே2-30 மணி நேரம் பேசினார். பிரகு ராமநாதன் அவர்கள் ஆங்கிலத்தில் பேசினார் அன்று அனேகர் அனேக புதிய விஷயங்களை உணர்ந்ததாகப் பேசி அளவுக்குமீறி மூட நம்பிக்கை கொண்டு புகழ்ந்து பேசினார்கள். கூட்டம் முடிந்ததும் அங்கு திரு. பார்த்தசாரதி ரெட்டியார் வீட்டில் இரவு விருந்து சாப்பிட்டுவிட்டு உடனேஎல்லோரும் காரிலே 30-மைல் தூரமுள்ள பிறைங்கு வந்து 10-30 மணிக்குச்சேர்ந்தார்கள். அங்கு பினங்கு இந்திய அசோஷியேஷனில் இரவு 10-30 மணிக்கு பினங்கு ஆதி திராவிட சங்கத்தாரால் கூட்டப்பட்ட ஒரு பெரிய கூட்டத்தில் ஏராளமாய் மக்கள் கூடி இருந்தார்கள். அங்கு திரு. ராமசாமியாரும் அவரது கோஷ்டியாரும் வந்து சேர்ந்ததும் எல்லோரும் எழுந்து பெருத்த ஆரவாரத்துடன் வரவேற்று எல்லோருக்கும் மாலை போட்டார்கள் பிறகு உயர் திரு. வீரப்பன் அவர்கள் தலைமை வகித்து ஆதிதிராவிட சமுகத்திற்கு திரு. ராமசாமியாரால் ஏற்பட்ட நன்மைகளைப்பற்றி எடுத்துச் சொல்லி ஆதிதிராவிட சங்க காரியதரிசியால் ஒருவரவேற்பு பத்திரம் வாசித்து கொடுக்கப்பட்டது. அப்பத்திரிகைக்கு பதில் சொல்லி விட்டு ஆதிதிராவிடர்களுக்காக என்றுதான்ஒன்றும் செய்யவில்லை என்றும்ஆதிதிராவிடர்களைப்போலவே "வெரும்" திராவிடர்களும் மற்றொரு சமூகத்தாரால் தீண்டாதவர்களாகவும் தாழ்ந்த குலத்தவர்களாவும் மதிக்கப்பட்டு சமூக வாழ்வில் இழிவு படுத்தப்படுகின்றார்கள் என்றும் அதற்கு சமாதானம்இந்து மதகொள்கை என்றுதான் சொல்லப்படுகின்றதென்றும் ஆதலால் ஒன்று இந்து மதம்என்பதுஒழிந்தாலொழிய அல்லது அந்த மதத்தை விட்டால் ஒழிய தீண்டாமையும் தாழ்ந்த குலமும் சூத்திரப் பட்டமும் கண்டிப்பாய் போகாதென்றும் ஆதிராவிடர் எவ்வளவு தான் விபூதியும் நாமமும் பூசினாலும் ருத்திராச்சமும் துளசி மணியும் கட்டினாலும் "தீண்டாமையும்" "இழி குலமும்" போகாதென்றும் ஆதலால் என்ன காரியம் செய்தாவது எதை இழந்தாவது தங்கள் இழிவை நிவிர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்று துணிகின்றவர்கள் தான் முன்னேருவார்கள் என்றும் 1-30 மணி நேரம் பேசினார் அக்கூட்டம் விடாமல் ஒவ்வொரு வார்த்தைக்கும் கைதட்டிக்கொண்டேஇருந்ததுபிறகு தலைவர் முழுதும் ஆதரித்து பேசி கூட்டம் இரவு 12 மணிக்கு கலைந்தது.

### 10—1—30
### பட்டர்வர்த்—தைபிங்

மரு நாள் காலை பினங்கு இருந்து பட்டர்வர்த் என்றும் கோலப்பிரை திரு.செ.ராமநாதன் செட்டியார்அவர்கள்அழைப்பிற்கிணங்கி பட்டர்வர்த்து சென்று அவரால் செய்யப்பட்ட ஒரு பொது விருந்து உண்டு சிறிதுநேரம் பேசிவிட்டு திருவாளர்கள் ராமநாதன் சாமி சிதம்பரனர் தவிர மற்றவர்கள் எல்லோரும் 3 மணிக்கு 60 மையில் தூரமுள்ள தைப்பிங்கிலிருந்து அழைக்க வந்த கனவான்களுடன் மோட்டார்கார்களில் ஒரு பெரிய கூட்டம் புரப்பட்டு 5 மணிக்கு தைப்பிங்கு அடைந்தார்கள். அங்கு தைப்பிங்கில் திருவாளர் இரத்தனசாமி அவர்கள் தலைமையில் ஒரு பெரிய வரவேற்பு கமிட்டி ஊர்முகப்பில் 10, 15 மோட்டார்களுடன் வாத்தியங்களுடனும் எதிர்பார்த்திருந்து உடனே தளைகளாலும் புஷ்பங்களாலும் நன்ருய் அலங்கரித்திருந்த ஒரு மோட்டார் காரில் மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாய் 2 மையில் தூரம் தைப்பிங் இந்திய சங்கத்திற்கு அழைத்துக் கொண்டு போய் அங்கு ஒரு, பெரிய டீபார்ட்டி நடத்தப்பட்டு பிறகு சங்கத் தலைவர் ஜனப் டாக்டர் மகமட்கவுஸ் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் நடந்தது. டாக்டர் கவுஸ் அவர்கள் முகவுரையாக திரு. ராமசாமியாரைப் பற்றியும் அவர் ஈபோவில் செய்த 2, 3, பிரசங்கங்களை தான் பக்கத்தில் இருந்து கேட்டதைப்பற்றியும் புகழ்ந்து பேசி விட்டு அச்சங்க சார்பாக ஒரு வரவேற்பு பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. பிறகு திரு. ராமசாமியார் 2 மணி நேரம் பணக்காரர்களும் பார்ப்பனர்களும் ஒன்று என்றும் இருவர்களாலும் நாட்டுக்கு நன்மை உண்டாகாதென்றும் 'இருவர்களும் உடல் வேலை செய்யாமல் ஏழை மக்களின் உழைப்பால் ஏமாற்றிப்பிழைக்கின்றவர்கள் என்றும்

சொல்லி இரண்டையும் சுமார் 40, 50 விதத்தில் ஒப்பிட்டு பேசினர். பணக்காரர்களும் சேர்ந்தே சிரித்துக் கொண்டிருந்தார்கள். பிறகு தலைவர் முடிவுரை கூறி திரு. பொன்னம்பலனரால் மனிதரெல்லாம் ஒரு ஜாதியே என்கின்ற பாட்டுபாடியபின் கூட்டம் 7-30 மணிக்கு கலைந்து உடனே மோட்டார் ஏறி 60 மையில் 2வது பட்டர்வர்த்திலிருந்து மேட்டார் படகேரி 10-30க்கு பினங்கு வந்து அங்குஉலகப்பிரசித்தி பெற்றமலாயாநாடகம் ஒன்று 12 மணி வரைபார்த்து விட்டு 1-மணிக்கு ஜாகைக்கு வந்து சேர்ந்தார்கள் இந்த மத்தியில் பினங்கில் திரு. ராமநாதன் சாமி சிதம்பரனர் அவர்கள் இருவரும் பினங்கு இந்தியா சங்கமைதானத்தில் இந்திய சங்கத்தாரால் ஆங்கிலம் தெரிந்தவர்களுக்கு என்று ஒரு கூட்டம் ஏற்பாடு செய்திருந்தபடிக்கு அங்கு ஏராளமான ஜனங்கள் மாலை 5 மணிக்கே வந்து கூடிவிட்டார்கள் அக்கூட்டத்திற்கு ஆனரபிள் நம்பியார் குமாரர் திரு. டாக்டர் மேனன் அவர்கள் அக்கிராசனம் வகித்து சுயமரியாதை இயக்கத்தைப்பற்றியும் ராமசாமியாரைப் பற்றியும் அரை மணி நேரம் பேசி பிறகு திரு. ராமநாதன் அவர்களை ஆங்கிலத்தில் பேசும்படி கேட்டுக் கொண்டார் திரு.ராமநாதன் அவர்கள் சமதர்மகொள்கை என்பது பற்றி சுமார் 1-30 மணி நேரம் ஆங்கிலத்தில் பேசியபிறகு சாமி சிதம்பரனர் 1 மணி நேரம் சமரசமும் புராணங்களும் என்பதுபற்றி பேசினர். பிறகு ஜனப் மகமத் யூசப்பாவலர் அரை மணி நேரம் சுயமரியாதை இயக்கமும் முஸலீம்களும் என்று பேசினர். பிறகு டாக்டர் ராகவன் முடிவுரை செல்லி வந்தனோபசாரம் செல்லி கூட்டம் முடித்து பிறகு குடி அரசில் கட்டுரை எழுதிவரும் திருமதி ஜானகிஅம்மாளால் திருவாளர் ராமசாமியாருக்கு ஒரு கைபிடி போட்ட பூதக்கண்ணாடியும் திரு. நாகம்மாளுக்கு ஒரு சிறியபவுண்டன் பேனா பென்சில் அடங்கியபெட்டியும் திரு ராமநாதன் அவர்களுக்கு குளிர்ச்சிக் கண்ணாடியும் பென்னம்பலனருக்கு ஒரு குளிர்ச்சிக்கண்ணாடியும் சாமி சிதம்பரனருக்கு ஒரு பெரிய பவுண்டன் பேனாவும் பரிசளித்தார்கள்.

இத்துடன் மலாய் நாட்டு சுற்றுப் பிரயாண நடவடிக்கைகள் முடிவு பெற்று மருநாள் காலையில் இந்தியாவிக்கு கப்பல் எறுவதாய் ஏற்பாடு செய்திருந்தபடி காலையில் எழுந்து முதல் இரண்டு மணி நேரம் ஜாகைக்கு வந்த கனவான்களுக்கு பேட்டி கொடுத்து பயணம் சொல்லிக்கொள்வதே வேலையாயிருந்தது பிறகு அங்கிருந்து நேரே கப்பலுக்கு புறப்பட்டு திரு. கிருஷ்ணசாமி ஜே. பி. ஆனரபிள் அப்துல் காதர் முதலியவர்களை சந்தித்து தேயிலைப்பானம் பருகி விட்டு நேரே இந்திய ஏஜண்டாபீசுக்கு சென்று இந்திய ஏஜண்ட் இன்சார்ஜ திருநடேசம்பிள்ளை அவர்களுடன் கப்பல் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்ததும் கப்பல் துறைமுகத்தில் ஜனங்கள் நடமாட முடியாதகூட்டங்கள் கள்ஏராளமாய் மாலைகளுடன்வந்து காத்திருந்தவர்களிடமெல்லாம்பயணம் சொல்லிவழியனுப்பு மரியாதைப் பெற்று பழங்களும் தின்பண்டங்களும் ஏராளமாய் கூடைகூடையாய் கொடுக்க வாங்கி பெரிய ஜே சப்தத்துடன் கப்பலில் கால் வைத்து ஏறினர்கள் சிலர் கைதட்டவும் சிலர் அழுகவும் சிலர் ஏதோ அர்த்தமல்லா தவார்த்தைகளைச் சோல்லி ஜே போடவுமாய் இருக்கும் ஆர்பட்டத்தில் கப்பலேறினர்கள் கப்பலுக்கு சுமார் 100 பேர் வரையில் கூடவேஏறினர். கள் பத்திரிகா நிருபர்கள் வந்துபேசி மலாய்நாட்டு சுற்றுப்பிரயாணத்தின் அபிப்பிராயம் தெரிந்து போனர்கள் சரியாய் 12 மணிக்கு கப்பல் புறப்படும் சைகைகாட்டி பயணம் அனுப்ப வந்தவர்களை கீழே இறங்கும்படி கேட்கொண்டார்கள் கப்பலுக்கு வந்தவர்கள் ஜனப்புகள் முகமது ராவுத்தர் சீனிராவுத்தர் மகமதுயூகப் யாகூப்ராவுத்தர்முகமதுசேன்கே.சுப்பரமணியம் பிரகாசம் தாமோதரம் ஸ்ரீமதி தமோதரம் வேலு நாடார் மலாய் இந்திய கவர்ன்மெண்ட்ஏஜண்ட்இன்சார்ஜ் நடேசம் பிள்ளை சாமி அற்புதானந்தர் சேதுராம செட்டியார் யம். துரைராஜ முருகையா பிரயாணிகள்இன்ஸ்பெக்டர்பலராமன் பாண்டிச்சேரி சுந்தரராஜு செல்லச்சாமி பாலராம் பரஞ்சோதி கோபால் நடேசன் அப்பாவு எ. யம். ஆர். கம்பனி மானேஜர் முதலியவர்களாவர் கள்முன்னேற்றம்பத்திராதிபர் அவர்கள் திரு. நாராயணசாமி கூடவே இந்தியாவுக்கு வந்தார்.

பிறகு சரியாய் 12-30 க்கு கப்பல் புறப்பட்டுவிட்டது வெய்யில் கடுமையாக இருந்தும் அதுவரை காத்திருந்து தோப்பிகளையும் துவால்களையும் வீசி வீசி ஆட்டிக்கொண்டே இருந்தார்கள்.

இசசுற்றுப்பிரயாணத்திற்கு காரணகர்த்தாக்களாயிருந்த திருவாளர்கள் அற்புதானந்தா அய்யாரு சாரங்பாணி கே. சுப்பரமணியம் ஆகியவர்கள் திரு ராமசாமியாருடன் கூடவே ஒவ்வொரு நிமிஷமும் இருந்து வரவேற்பு காரியங்கள் ஒவ்வொன்றையும்நேரேஇருந்து ஏற்பாடுசெய்துகூடவே ஆபீசுபோவது போல் கடிதப் போக்குவரத்து தந்தி போக்குவரத்து முதலியதுகள் செய்துகொண்டு இரவும் பகலும் சிறிதும் உரக்கமும் ஓய்வுமின்றி அலைந்து சுற்றுப்பிரயாணத்தை என்றுமில்லா வெற்றியுடன் முடித்துக்கொடுத்த காரியம என்றும்மிகவும்பேற்றக்கூடியது திரு அய்யாரவர்கள்மனைவியாரும் திரு தாமோதரம் அவர்கள் மனைவியாரும் தாமோதரனும் ஒருவர் விட்டு ஒருவர் மாரி மாரி திருமதி நாகம்மாளுடன் கூடவே இருந்து அவர்களுக்கு வேண்டிய சவுகரியங்கள் செய்துகொடுத்துவந்தது மிகவும் பாராட்டதகுந்ததும் நன்றி செலுத்ததக்கதுமாகும் ஈபோவிருலிந்து சாரணர் கமிஷனா அவர்கள் அனுமதியின் பேரில் ஆறு சாரணர்கள் [ஸகவுட்ஸ்] கோஷ்டியுடன்கூடவே கடைசி வரை வந்து வேண்டிய சவுகரியங்கள் செய்து கொடுத்து வந்தது மிகவும் போற்றதக்கதுமாகும் மற்றும் திருவாளர்கள் சிங்கப்பூர் ஒ.ராமசாமி நாடார் பினங்கு மகமது ராவுத்தர் ஆகிய இரு கனவான்களும் இரண்டு ஊர்களிலும் தலைக்கு 2000, 3000 ரூ வீதம்செலவு செய்து வரவேற்பு ஆடம்பரங்கள்செய்ததும் அதிகசெலவு என்றுதிரு ராமசர்மியாரால்வருத்தத்துடன் சொல்ல நேர்ந்தபோதிலும் அவர்களுடைய அன்புக்கும் உர்ச்சாகத்திற்கும் என்றுமறவாமல்நன்றிசெலுத்த வேண்டியது முதற்கடமையாகும். நகரத்தார் சார்பாகபத்து பகார் திரு. பழனியப்பர் அவர்கள் எடுத்துக்கொண்ட உர்ச்சாகமும் பிரயாசையும் மிகவும் மதிக்கதகுந்ததும் நன்றி செலுத்தகுந்ததுமாகும்

மலாய் நாட்டில் செய்த சுமார் 40 பிரசங்கங்களையும் சுருக்கி ஒரே பிரசங்கமாக பின்னல் வெளிப்படுத்தப்படும்.

இந்த சுற்றுப்பிரயானமானது இவ்வளவு வெற்றிகரமாய் ஏற்பட்டதற்கு காரணம் எதிர்ப்பிரசாரத்தால் மக்களுக்கு ஏற்பட்ட உணர்ச்சியேயாகும்.

மலாய் நிருபர்.



சிங்கப்பூர் வாலிப சங்கத்தார் எடுத்த புகைப்படம்.

இடமிருந்து வலம்.

நிற்பவர்கள்:—வாலிப சங்க பிரதிநிதிகள், 1. பென்ஜமின், 2. ஏ. பொன்னுசாமி, 3. பி. எ. சொக்லிங்கம், 4. நாராயணசாமி, 5. டி. ஆர். கோவிந்தன், 6. டி. நடேசன், 7. ஜி. முத்து கிருஷ்ணன், 8. எம். பக்கிரிசாமி, 9. எஸ். ஒலிமகமது, 10. வி. குப்புசாமி, 11. எஸ். ராஜகோபால்.

உட்கார்ந்திருப்பவர்கள்:—1. எ. சி. சுப்பையய்யா, 2. காளியப்பன், 3. சாமி சிதம்பரனர், 4. எஸ். ராமநாதன், 5. ஈ. வெ. ராமசாமி, 6. நாகம்மாள், 7. ஒ. ராமசாமி நாடார், 8. ராமலிங்கம், 9. எஸ். கோபால், 10. ஆர். அய்யாரு.

கீழே உட்கார்ந்திருப்பவர்கள்:—சாரணர்கள் ஐவர், ஒ. ராமசாமி நாடாரின் குழந்தைகள் இருவர். மேஜை மீது இருப்பது சன்மாணம் அளித்த வெள்ளி கோப்பையும் கண்ணாடியும்


## விளம்பரம்.

வட ஆற்காடு ஜில்லா போர்டு சுங்கக் கேட்டுகளில் 1930—31 வருஷத்திற்கு வசூல் செய்யும் பாத்தியதையை 19—2—1930 புதன் கிழமை பகல் 12-மணிக்கு டை. போர்டு ஆபீசில் பிரசிடெண்டு அவர்களால் பகிரங்கமாய் ஏலம் விடப்படும்.

வட ஆற்காடு ஜில்லா போர்டு ஆபீஸ், வேலூர், 4—2—30

கே. கிருஷ்ண சாமி நாயுடு, பிரசிடெண்ட்.

## கல்லும் மண்ணும் கடவுளா?

### காளைகள் எதிரில் கொங்கைகள் குலுங்க ஆடுவது பேயா?

தூக்க நாயக்கன்பாளையம்
டி. பி. கே. எழுதுவது

கோவை ஜில்லா பவானி தாலுக்கா அந்தியூருக்கு அடுத்த வடபுறம் மலையடிவாரத்தில் கருமலை ஆண்டவன் சன்னதியென்றுளது. அதில் கருப்பராயன், தவசியப்பன், முனியாண்டி என மூன்று கோவில்கள் இருக்கின்றன. இங்குப்பிள்ளை இல்லாதவர்களும், பேய் பிடித்தவர்களும், நோய் கொண்டவர்களும் வாரவாரமும்குறித்தசிலவாரங்களும் சென்று தங்கள் ஊழ்வினைகளை நீக்கிக் கொள்ள ஆயிரக்கணக்கான ஜனங்கள் போய் வருகிறார்கள். அங்கு இருக்கும் செடிகளிலுள்ள தழைகளைப் பிடுங்கி எந்த இடத்தில் வலியோ காயமோ, குடைச்சலோ, இருந்தால் அந்த இடத்தில் பூசினால் எல்லா விதரோகங்களும் போய் விடுகிறதாம்! இவ்வேடிக்கையைப்பார்ப்பதற்காகப் போகிறவர்கள் பலர். நானும் எனது நண்பர்கள் பலரும் சென்றவாரம் காலையில் புறப்பட்டு மத்தியானம் ,ஷை சன்னதியை அடைந்து சாப்பிட்டபின் தவசியப்பன் கோவிலைப் பார்த்தோம். அங்கு மண்ணினால் செய்யப்பட்ட பெரும் சிறு உருவங்களும் இரும்பினால் செய்யப்பட்ட வேலாயுதங்களுமிருந்தன. அதன் பக்கத்திலிருக்கும் செடிகளிலிருந்த தழைகளைப்பிடுங்கிக்கல்லிலரைத்துச்சில குழந்தைகளின் மேனியிலும் சிலர் தங்கள் தங்கள் கால்களிலும் கைகளிலும் பூசிக்கொண்டிருந்தார்கள். [இதைக் கண்ட எனது நண்பர் ஒருவர், 'இந்தத்தழை தான் தேகத்திலுள்ள சீர்கோட்டை நலஞ் செய்வதோ' என்றது குறிப்பிடத் தக்கதாகும்.] பிறகு கருப்பராயன் கோவிலை அடைந்தோம். அங்கும் அதே உருவங்கள் காணப்பட்டன. இவ்வொவ்வொரு கோவிலுக்கு எதிரிலும் அங்குச் செல்லும் ஒவ்வொரு ஜனங்களும் அங்குக்கடைகளில் விற்கும் கற்பூரத்தைக் கொண்டு போய் வைத்துவிடுகிறார்கள், அதை அவரவர்கள் பற்றவைத்து கும்பிடக் கூடாதாம், இதன் சூட்சமம் என்னமோ! பிறகு குறுக்கு வழியில் கால் நடையாய் முனீஸ்வரன் கோவிலுக்குவந்தோம், வரும் வழியில் சில கற்களுக்கு எதிரில் கற்பூரக் குவியல்களிருந்தன. அதிலோரிடத்தில் கற்பூர தீபாராதனையாகி செஞ்சுடரோங்கியது, மனித சக்தியோ, கன்னியின் சக்தியோ; நடந்த கால் நோய்தீர, நங்கைமார் ஆடும் இடத்தை நண்ணினோம். அப்பப்பா, அங்கு நடந்த செய்கைகள் செ ால்லத்தரமாமோ, அங்குப் பிரமாண்டமாயிருக்கும் மண்ணுருவங்களை ஒரே பார்வையாகப் பார்த்துக் கொண்டிருக்கும் பாவையரும் கச்சணியாக் கன்னியரும் ஒருவித மயக்கங்கொண்டு தலைவிரி கோலமாய் ஆடவும், கண்டபடி பாடவும் இதை ஏற்கனவே செல்லும் இளங்காளையர்கள் இவர்களின் தேக பாகங்களையும் கண்டு, களிகொண்டாடவும் நாட்டுப் பெண்களை காட்டிக்கழைத்து வந்து ஆட்டிவைக்கும் கணவன்மார்கள் அன்னிய ஆடவர்கள் கண்டு சிரிப்பதைப் பொறுக்க முடியாது வெட்கத்தால் தலைகுனிந்தும், ரோஷத்தால் ஷை பெண்களை அதாவது ஆட்டத்திலிருப்பவர்களை "ஆடியது போதுமெனக்கோபம்கொண்டு மயிரைப்பிடித்துஇழுத்துக் கீழே தள்ளிஉயிர்போகச்செய்து தண்ணீர்காட்டியதும் விந்தையிலும் விந்தையே. இதை நாங்கள் நேரில் பார்த்ததோடல்லாமல் மீனும்பிகா என்னும் ஒரு பெண் தன்னை இறந்துபோன சர்க்கலகார ராஜகோபாலனென்பவன் பிடித்துக்கொண்டதாக ஆடிக்கொண்டு கரணங்கள் போட்டதும், பால்கொண்டுவாஎன்றதும் பூட்லை, மேஜோடு கொண்டுவா என்றதும் பார்த்துச் சிரித்து வயிறு வலிகொண்டது. எங்களூர் குடியானப் பெண் ஒருவள் ஒருவருஷத்துக்கு முன் பல வாரங்கள் சென்றும் தனக்குள்ள வயிற்றுவலி நாளுக்கு நாள் அதிகரித்ததே தவிர தீர்ந்தபாடில்லை. மாயம் என்றும், மந்திரம் என்றும், கல்லையும், மண்ணையும் கடவுளென்றும் சொல்லி மயங்கும் சகோதர சகோதரிகளே; இவ் வாபாசங்களை நன்காராய்ந்து பாருங்கள். மானமிழந்து மதிகெடாதீர்கள். கடவுள் இல்லையென பிரசங்கம் செய்வதாய் நம் சுயமரியாதைத் தலைவர் ஈ. வெ, இராமசாமிப் பெரியாரை நிந்திக்கும் கணவான்களே. நம் பெரியார் சொல்வதில் ஏதாவது பொய் இருக்கின்றதா? இல்லவே இல்லை. இல்லை. சாமி என்றும், சாந்தியென்றும், மந்திரம் என்றும், தந்திரம் செய்து காசு பறிக்கும் சாமியாடி, பூசாரி, அர்ச்சகர் குருக்கள் என்கிற புரட்டர்களின் வலையில் சிக்கவேண்டாமென்றுதான் சொல்லுகிறார். மற்றும் இதுபோன்ற மூட பழக்க வழக்கங்களை நீக்கவேண்டுமென்று தான் சொல்லுகிறார். ஒவ்வோரு விஷயங்களையும் அனுபோகத்தில் தெரிந்தே நாம் செய்துகொள்ளும் ஒவ்வொரு மூடப்பழக்கத்துக்கும் கண்ணப்பரையும், கைவல்யரையும் நிந்திப்பதில் பலனென்ன! 'பூசாரி பேச்சைக் கேட்டுபூ பூங்காவனம் சென்று பூவையரை யாட்டிக்காட்டிக் கண்டவர்கள் சிரித்துக் கொண்டவர்கள் தலைகுனிவது தான்கண்டபலன்' என்றும் ஆன்றோர்வாக்கியத்தைஉணர்ந்து இனியாவதுநம்இந்தியமக்களை இம்மாதிரி காரியங்களில் தலையிடாது நம் சுயமரியாதைச் சூரியன் காப்பாற்றுவாராக.

## நன்கொடை.

கொளும்பு ஜிந்தும்பெட்டித்தெரு 1-ெந. கடையில் திருவாளர் ச. முத்தையா பண்டிதர் அவர்கள் தகப்பனார் காலஞ்சென்ற சந்தனம் பண்டிதர் அவர்கள் வருஷத் திதியை 31-1-30 தேதியில் புரோகித சடங்கை அறவே ஒழித்து சுமார் 75 ஏழை மக்களுக்கும், பந்துமித்திரர்களுக்கும் அறுசுவைகளுடன் அன்னமளிக்கப்பெற்றது. மேற்படி திதியைப் பொருத்து "குடி அரசு" பத்திரிகைக்கு ரூ. 1-ம், "சுயமரியாதைத் தொண்டன்" பத்திரிகைக்கு ரூ. 1-ம் நன்கொடை அளிக்கப் பட்டது.

## விருதுநகர் க்ஷத்திரிய பெண் பாடசாலை.

### 15-வது வருஷப் பூர்த்திக் கொண்டாட்டம்.

நாளது சுக்ல-ஹு தை-மீ 26-உ [8—2—30] சனிக்கிழமை மாலை 4-மணிக்கு பாடசாலை ஹாலில் மதுரை, முனிசிபல் பெண்கள் டிரெயினிங் ஸ்கூல் தலைமை உபாத்தினி மிஸிஸ். எல். தாமஸ பி. எ- எல். டி. அவர்கள் தலைமையின்கீழ்நடைபெறும்.

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

பொருந்தாப்பொய்மைக்குப் ஓரளவுண்டோ?

இராவணன் இந்திரசித்தினிடம் கூறியதையெல்லாம் கம்பர் கூறவேயில்லை. மேலும் அவன் பேசினதாகக்கூட அவர் கூறவில்லை. இந்திரசித்தன் பெருஞ்சேனையோடு சென்று போரிட்டதாக அவர் கூறுகிறார். வால்மீகியைக்காட்டிலும் கம்பருக்கு அனுமானை பெருமையாகக்கூற வேண்டுமென்ற ஆசைப்பற்றி அளப்பிலாப்பொய்யுரைகள் கூறி அவனை அவர் போற்றிப்புகழ்ந்து மகிழ்கிறார். அனுமான் சிறிது நேரம் மூச்சற்றுக்கிடந்தானெனக்கூறின் அவன் புகழ் குறையுமெனக்கருதி அந்நிகழ்ச்சியைக்கம்பர் கூறுகின்றலர். மேலும் அவன் உடன் நான்முகன் கணைபென அறிந்து அதற்குக் கட்டுப்பட்டுக் கண் மூடியிருந்தானென அவர் கூறுரார். அனுமனை ஐம்பதினாயிரம் பேர் பிடித்துப் போயினரெனக் கம்பர் கூறுகிறார். இது போலும் பொய்ம்மையுரை உளதாமோ? ஒருவனை பதின்மர் பற்றுவதே கூடாதாக ஐம்பதினாயிரவர் பிடித்தனர் என்பது எவ்வாறும்? இனி மேற் சொல்லுதும்.

குணம் இல்லையாயின் பணம் வாபீஸ்.

தேகாரோக்கியம்.

# வைரத்திற்கு மேலானது!

## நாராயண சஞ்சீவி லேகியமும்

### அயத்தங்க செந்தூரமும்

இரத்தத்தை சுத்தி செய்து, நரம்புகளை முறுக்கேற்றி, தேக அழலையைப் போக்கி,சீதோஷ்ணத்தை சமனப்படுத்தி, ஆரோக்கியத்தையும் தாது விர்த்தியையும் உண்டாக்கி, சிற்றின்பத்தில் மிக மகிழ்ச்சியைத் தரும். துர் அப்பியாசத்தினால் உண்டாகும் பலஹீனத்தைப்போக்கி அபாரமான ஞாபக சக்தியை உண்டாக்கும். 20-வகை மேகரோகங்களையும் போக்கடிக்கும்.

24-நாள் லேகியமும் அயத்தங்க செந்தூரம் புட்டி 1-ம் ரூ. 2—4—0
48-நாள் " " " " 2.ம் ரூ. 4—4—0

நாராயண சஞ்சீவித் தைலம்,—பச்சிலை மூலிகைகளாலும் பசும்பால் முதலிய பரிசுத்த வஸ்துக்களாலும் மிகச் சுத்தமாக செய்யப்பட்டன. தேக வரட்சியைப் போக்கி, மூளையைக் குளிரச் செய்து புத்திக் கூர்மையையும் ஆரோக்கியத்தையும் உண்டாக்கும். கடந்த 25 வருடகாலமாய் இதை ஆயிரக்கணக்கானவர்கள் வாடிக்கையாய்வாங்கிஸ்நானம் செய்து தேகாரோக்கியத்தைதோடு வாழ்ந்து வருகிறார்கள்.

5 பல டின் 1-க்கு விலை ரூ. 1—0—0

நாராயண திராட்சைப் பழ லேகியம்:—மலச்சிக்கலே எல்லா வியாதிகளுக்கும் காரணம். இதனால் நமது நாட்டில் கோடிக்கணக்கானவர்கள் அவஸ்தைப்பட்டு அதை சரியாய் கவனிக்காமையினால் அநேக வித நோய்களுக்கு ஆளாவதை நாம் நேரில் பார்த்திருக்கிறோம். அதற்கு இது திவ்வியமான மருந்து. சாப்பிடுவதற்கு மிக ருசியாய் இருக்கும். இரவில் படுத்துக்கொள்ளும்போது ஒரு கேச்சக்காய் பிரமாணம் சாப்பிட்டு படுத்துக்கொண்டால் காலையில் மலம் தாராளமாய்ப் போய்விடும். யாதொரு கெடுதலுமில்லை. தேகம் ஆரோக்கியமாயிருக்கும்.

டப்பி 1-க்கு விலை ரூ. 1—0—0

எல்லாவற்றிற்கும் தபால் செலவு வேறு. வெளிநாட்டன்பர்கள் தபால் செலவு சேர்த்து முன்பணமாக அனுப்பவேண்டும்.

ஸ்ரீ நாராயண மேடிகல் ஹால், காஞ்சீபுரம்.

[3-ம் பக்கத்தொடர்ச்சி)

ப்பட்டு அதன் தத்துவங்கள் வியாபிக்கக் கூடியதுமன்று. மீனம் மேஷம் ரிஷபம் முதலியவைகளைத் தின்னும் மனிதர்களைவிட உயர்ந்தவர்கள் இந்தக் காலத்திலும் முன்காலத்திலுமிருந்ததுண்டா? முன்காலத்திலும் இந்தக் காலத்திலும் இருந்ததாக எந்தச் சைவப் பிரசங்கியாலும் சொல்லத்தான் முடியுமா? அன்றியும்

“சைவ சித்தாந்த நூற்பிரமாணங்களைச் சொன்னால் செவி மடுப்பாரில்லை. ஆனதால் மேல்நாட்டுப் பிரமாணங்களைக்கூறியே உங்களை மகிழ்விக்கிறேன்” என்று தலைவர் சைவ சபைக்குச் சொல்லுகிறார். சைவ சித்தாந்த சபையில் சைவசித்தாந்த நூற் பிரமாணங்களுக்குச் செவி சாய்ப்பவர்களில்லாவிட்டால் சைவ சித்தாந்த சபையினால் என்ன பிரயோஜனம்? சைவசித்தாந்த நூற் பிரமாணங்களுக்குச்செவிசாய்க்காத சைவர்களும் அதைத் தெரிந்துகொண்ட சபைத்தலைவரும் மேல் நாட்டுப் பிரமாணங்களில் மகிழ்வடையும் சைவ சபையும் அதைத்தெரிந்து சபையோர்களை மகிழ்விக்கப் புறப்பட்ட சித்தாந்த ஆசிரியரும் மேனாட்டுப் பிரமாணங்களுக்கு ஒத்தவைகளை சைவ சபையில் தீர்மானப் படுத்தியிருந்தால் நமது சமயத்தால் சமூகங்களடைந்துவரும் கொடுமைகள் அநேகம் ஒழிந்துவிடுமே நாடும் நலமடையும் மேனாட்டுப் பிரமாணத்தாலே சைவ சபையை மகிழ்வடையச் செய்யப் புறப்பட்டதலைவர் மீன மேஷ ரிஷபங்களைத்தின்னுகிறவர்களுக்கு மிதுனத்திற்கு மேற்பட்ட தத்துவம் விளங்காது என்றுசொன்னதுநியாயமாகுமா? கத்தரிக்காய் சாம்பாராலும், வெண்டக்காய் புளிக்குழம்பாலும், பூசனிக்கா மோர்க்குழம்பாலும், சோற்று வடகத்தாலும், சுண்டவத்தலினாலும்மேனாட்டுப்பிரமாணங்கள்வளர்ந்ததல்லவே. மீன மேஷ ரிஷபங்களைத்தின்று கூர்மத்தின் கொழுப்பையும் உண்டு பச்சைத்தவளையின் தலை மூளையிலுண்டானதல்லவோ மேனாட்டுப் பிரமாணங்கள். இந்த பிரமாணங்களினால் தான் சைவசபையோர்கள் மகிழ்வடைவார்களென்றும் சபைத்தலைவர் தீர்மானம்செய்ததைப் பற்றினவரையில் ஆக்ஷேபனை எங்களுக்கில்லை. அது உணர்ச்சியற்றபேச்சென்றும் வலியவனைக்கண்டால் அவன் பாதத்தூளியைத் தாங்குவதும் மெலிந்தவர்களைக்கண்டால் மரிக்கும் வரையிலும் கொடுமை செல்வதும் நமது சமயவாதிகளின் குணமா? அல்லது சைவ சபைக்கே அதுதான் தன்மையா என்றே “குடிஅரசு” கேட்கிறது. இந்து சமயத்தவர்களுக்கு கிருஸ்துவ சமயத்தைப் போதிக்க பாதிரிகளை அனுப்புவது பிரயோஜனமற்றதென்று மேனாட்டார் உணரும்படியாகவும் இந்து சமயங்களின் உயர்ந்த தத்துவங்களை மேனாட்டிற்குச் சொல்லியும் நமக்குப் பெருமை அளித்த சுவாமி விவேகானந்தர் மீனம் மேஷம் ரிஷபத்தையும் தின்று கூர்மத்தையும் கூட்டிப் பிடித்துண்டவரல்லவோ.

இச்சடவாழ்க்கையில் மிதமிஞ்சிய பித்தேறிஇப்பிரபஞ்ச வாழ்க்கையனைத்தையும் தள்ளாதவர்களுக்கு ஸ்தூல பிரபஞ்சத்தாலும் காலத்தாலும் எட்டமுடியாத அகண்ட சொரூபம் விளங்காது என்று கேட்டிருக்கிறோம். மீன மேஷம் தின்பவர்கட்கு அவை எட்டாதென்பதற்குசாஸ்திரமும்அனுபோகமும் இடம் கொடுக்கா. இடம் கொடுப்பதாயிருந்தால் ஆடு மாடுகளை அடித்துத்தின்ற ரிஷிகள் சொன்னதுதானே வேத சுருதிகள். ஆடு மாடுகளை அடித்துத்தின்ற காலத்தில் தானே உபநிஷத்துகளுண்டாயின. இந்த சமயத்தின் எப்பகுதியினரும் சுருதிகளை ஒத்துக்கொள்ளவேண்டும். இதிகாசங்களிலுள்ள கதைகளையே சிவபெருமானுக்குப் பெருமையாக தேவாரம் பாடியிருக்கையில் சுருதிகளைச் சைவம் தள்ள நியாய மில்லையே. வேதத்தை ரிஷிகளுக்கு அருளிய பிர்மா மனிதனுக்காகவே மச்சத்தை உண்டுபண்ணினார் என்று மனுஸ்மிருதியி லெழுதப்பட்டிருக்கிறதே! ஸ்மிருதியால் வேளாளனைச் சூத்திரனாக்கி அதை சைவர்களுக்குப் பெரும் நூலான பெரிய புராணத்தில் சேக்கிழார் ஒத்துக்கொண்டிருக்கையில் மச்சம் மனிதனுக்காக உண்டாக்கப்பட்டதென்று ஸ்மிருதியின் வாக்கியத்தையும் ஒத்துக்கொண்டுதானே ஆகவேண்டும். இதிகாசத்தின் கர்த்தாவான ராமருக்கு காய்ந்த மீனக் கருவாடுதானே அன்பன் குகனால் அளிக்கப்பட்ட உணவு. சிவபெருமான் கண்ணப்பரால் சுவை பார்த்துக்கொடுக்கப்பட்ட பன்றி மான்முதலியவற்றின் மாம்சமும் சிறுத்தொண்டரால் விருந்தளிக்கப்பட்ட பிள்ளைக் கறியுமல்லவோ அவர் திருப்திப்பட்ட ஆகாரம். சிவபெருமானின் பிள்ளையான திருமுருகருக்கு மச்சமும் கோழியுமல்லவோ கொண்டு போய் படைப்பன அவருடைய பிரியத்துக்கு ஆளான போகருக்கு இன்றும் படைப்பன கள்ளும் கஞ்சாவும் கறியுமல்லவா? சிவபெருமானின் மூன்றாம்பிள்ளையான அகோரவீரபத்திரருக்கு மனித இரத்தம்தானே பிரீதி. சிவபெருமானின் மனைவிக்கு எருமைக்கிடா இன்றும் பலியுண்டே மனிதத்தலையை ஆரமாகக்கொண்டிருப்பது எந்தசிவபெருமான்?நமது பிதிர் தேவதைகள் அரிசியும் மாட்டுக்கறியும் கலந்து சமைத்த அன்னத்தில் தான் திருப்திபடுகிறதென்றுஸ்ராத்த விதிகள் சொல்லுகின்றன. இவர்களுக்கெல்லாம் மிதுனத்திற்கு மேற்பட்ட தத்துவம் விளங்கவில்லையா? சைவ சித்தாந்தத் தலைவர் சொல்லுவது உண்மையானால் இவர்களையெல்லாம் ஏன் கட்டியழவேண்டும்.

இவை யனைத்தையும் சட்ட ஒழுங்கிற்கும் சமய உண்மைக்கும் உட்பட்டதென்று பார்த்த பார்வையை மறைத்து தெய்வீகத்தன்மை என்றோ தெய்வீகத்தடுமாற்றமென்றே தள்ளிவிடலாமா? அது ஒரு குருட்டுச்சக்தி ஒரு மூடபக்தி நம்மாலறிய முடியாத விதி என்று நீக்கி விடலாமா? கடவுள் செயலுக்கு கட்டேது? மட்டேது? அவன்மனம் சென்றபடி யெல்லாம் செய்வான் அவருக்கு விதி யாரே கற்பிக்கவல்லர் என்று விட்டுவிடலாமா? எப்படியானாலும் அவை நிற்கட்டும்.

சிவ பெருமானின் சிநேகிதன் குபேரனிடம் ஒரு ஆகாய விமானமிருந்ததாகவும் சிவபெருமானின் வீட்டைப்பெயர்த்தெடுத்த ராவணனால் அது அபகரிக்கப்பட்டதாகவும் ஒரு கதை படித்திருக்கிறோம்; இப்பொழுதோ மீனமேஷ ரிஷபங்களைத்தின்பவர்களால் நமது கடிதங்கள்[ஆகாய விமானத்தில் புஷ்பவிமானத்தில்] ஆறுகாசுச்செலவில்அதன் மேலேறிப், போகிறது. சைவசமயம் உண்டாகி எத்தனையோ நாளாகியும் ஞானப்பாலுண்ட நமது ஆச்சாரிகள் சிவபெருமானின் திருக்கோலத்தைக்கொண்ட பக்திகளிலிருந்து ஒரு ஊமைப்பெண்ணைத்தான் இதுவரையிலும் பேசவைத்ததாகக் கேட்டோம் இப்பொழுதோ மீனமேஷங்களைத்தின்பவர்கள் சிவபெருமானின் திருக்கோலமில்லாமலே எத்தனையோ குருடர் எத்தினையே ஊமைகள் இவர்களைப்பேசவும் படிக்கவும் செய்கிறார்கள். சிவபெருமானின் தயவில்லாமலே இரும்பினால் மனிதனை சிருஷ்டித்து அந்தமனிதனால் வியாபாரமும் செய்யக் கட்டளையும் செய்திருக்கிறார்கள்மின்சார சக்தியாலும் நீராவி எந்திரத்தாலும் நாம் காணும் அற்புதங்களும் அதன் அமைப்புகளும் கத்திரிக்கா வாழத்தண்டுண்பவர்கள்கண்டு ஆச்சரியப்படக்கூடியதாகவிருக்கிறதேயல்லாமல் அதை அறியக்கூடியதாகவில்லையே.நமது கடவுளுக்குத்திருப்தி அளிக்கும் கற்பூரமும் நமது குழந்தைகளின் அழுகையை அடக்கும் பப்பர்மெண்டும் நம்மால் உண்டுபண்ண சக்தியில்லாமல் அவையனைத்தும் பாரமார்த்தீகத்திற்குப் பயன்படாதென்று சொல்லுகிறோம். சந்தோஷப்படுகிறோம் பாரமார்த்திகத்திற்கு சமயத்தை சாதிப்பதாகச் சோல்லுகிறவர்கள் பிரபஞ்சமான ஒரு சிறுபாறையில் கூட இடறிவிழுந்து தன்தேகம்பெண்ஜாதி பிள்ளை வீடுவாசல் தன்னறிவு இவைகளிலெல்லாம் மீனமேஷ ரிஷபத்தைத் தின்னுகிறவர்களின் சிந்திக்கிடக்கும் சின்னங்களை அடுக்கி ஆனந்தப்படாமலிருப்பது சிவபெருமானுக்கே சம்மதமில்லை. நாங்கள் அவைகளை வருந்தி அழைக்கவில்லை. திறந்த வீட்டில் எல்லாம் நுழைவது போல நுழைந்து கொண்டதென்பார்களோ அல்லது அவ்வழியாகத்தான் பிரபஞ்சம் எல்லாரையும் அழைத்துச் செல்லுகின்றதென்பார்களோ இவர்கள் எப்படியோ சொல்லி சத்துவமென்று தாமஸத்திலே அழுந்தி அழுகட்டும், இப்பிரபஞ்சத்தின் வாழ்க்கை எல்லாருக்கும் திறக்கப்பட்டு தெய்வத்தின் பொது விதியை எல்லாரும் அங்கீகரிக்கவேண்டுமென்றே சுயமரியாதைக்காரர்கள் சொல்லுகிறார்களே யல்லாமல் சிவலிங்கம் ஆண் பெண் குறியா? உலகத்தை அடக்கி உற்பத்திசெய்யும் தத்துவக்குறியா? பார்ப்பானை முகத்திலிருந்துண்டாக்கிய முகக்குறியா? வெள்ளாழனைபாதத்திலிருந்துண்டாக்கினபாதக்குறியா? எந்தக்குறியாகவிருந்தாலும் சுயமரியாதைச் சங்கத்திற்கு அதில் தர்க்கமும் சண்டையுமில்லை, அந்த சிவலிங்கத்தை விரும்பும் இந்துக்களுக்கெல்லாம் அக்குறி சொந்தமென்றே சுயமரியாதைக்காரர்கள் சொல்லுகிறார்கள்.

## கரந்தைத் தமிழ்ச் சங்க பெருநிதிச் சீட்டு.
## (Lottery)
## அறிக்கை.

சுமார் பதினையாயிரம் சீட்டுகள் வரையில் வெளியில் தங்கியிருப்பதாலும் விற்கப்பட்ட சீட்டுகள் வெளியிலிருக்கும் போது சீட்டுப்போடுவது முறையல்லவாதலாலும் குறிப்பிட்டபடி 18—1—30-ல் சீட்டுக் குலுக்குவதை நிறுத்திக் கணக்குமுடிப்பதற்கு 15—3—30 வரையில் நாள் கொடுக்கப்பட்டிருக்கியது. ஷை 15—3—30 க்குள் சீட்டு விற்பனை செய்பவர்கள் சீட்டுப்புத்தகங்களையும், விற்பனைத் தொகைகளையும் கணக்குடன் தவறாது அனுப்பவேண்டியது. மேற்படி நாளைக்குள், போதிய அளவு முன்னரே விற்கப்பட்ட சீட்டுகள் வந்து சேர்ந்தால், 15—3—30 லாவது அதற்கு முன்னராவது சீட்டுக்குலுக்கப்படும். சீட்டுப் போடும் நாளை பத்திரிகை வாயிலாக, 'அறிவிக்கப்படும்,

சீட்டின் தலைவர்.

(Retired Engineer)

நா. கந்தசாமிப் பிள்ளை,

## பிராமணீய ஒழிந்த சடங்குகள்

ம. புதுப்பட்டி:— இவ்வூர் லோயர் செக்கண்டரி கிரேட் பாடசாலை தலைமையாசிரியரும், குடி அரசு 8234-வது சந்தாதாரருமான கே. ரெங்கசாமியவர்கள் பாட்டியார் இறந்ததினத்திலும் 12-வது நாளிலும் பஞ்சாங்கப்படுபாவிகல் நெஞ்சப் புரோகிதனால் நடத்தப்படும் பண்டைய வழக்கங்களை அறவே யொழித்து சுத்த சுயமரியாதை முறையில் நடத்திவைக்கப்பட்டது.

ம. புதுப்பட்டி:— இவ்வூர் நாட்டாண்மைக்காரரும், லோயர் செக்கண்டரி கிரேட் எலிமெண்டரி பாடசாலை மானேஜரும், பஞ்சாயத்துக்கோர்ட்டு பிரஸிடெண்டுமான என். எம். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தாயார் இறந்த 16-ம் நாள் நடத்தும் சடங்கை மூடப்பழக்க வழக்கங்களகற்றி சுயமரியாதைக்கொள்கைப் படி நடந்தேறியது.

கே. ரெங்கசாமி.

ஜனங்களுக்குச் சந்தோஷத்தைத் தரும்

# ஜனோபகாரி தைலம்.

இத்தைலமானது 27 வகையான மூலிகைகளால் செய்யப்பட்டது. அநேக நற்சாட்சிகள் பெற்றது.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

நல்ல குளிர்ந்த வாசனையுள்ள தைலம்.

இத்தைலத்தால் தீரும் வியாதிகள்:- தீர்த்த தலைக்கனம், ஓயாத மண்டையிடி, ஒருதலைக்குத்து, தலையரிப்பு, முடிகழிதல் இவைகளை நீக்கிக் கூந்தலை வளரச் செய்யும். காதிரைச்சல், காதடைப்பு, குத்தல், கணவலி, எரிவு, கூச்சம்; நீர்வடிதல், சிகப்பு விழுதல், நாசியிலிருந்து மஞ்சள்நிறத் தண்ணீர்வடிதல், ஓயாத தும்மல், சிராபோல் விழுதல், வாய்க்கசப்பு, புளிப்பு, துர்க்கந்தமடித்தல் முதலிய வியாதிகள் நீங்கி தேகத்திற்குச் சுகம் உண்டாகும். கண்டத்துக்குமேல் ஏற்படக்கூடிய 96 வியாதிகளும் தீரும்.

பெரிய டின் ரூ. 1—12—0 | தபால் சார்ஜ் வேறு.
சிறிய டின் ரூ. 1— 0—0 |

# பார்சவாய்வு மருந்து.

விதை வாய்வு, நரம்புத்தடிப்பு, வலி, வீக்கம் முதலிய விதை சம்மந்தமான சகல வியாதிகளுக்கும் இந்த மருந்தை உபயோகியுங்கள். பத்தியம் கிடையாது. பெண்கள் அண்டவாய்வுக்கும் உபயோகிக்கலாம்.

14 வேளை மருந்து ரூ. 1—0—0, தபால் சார்ஜ் வேறு.

சிங்கப்பூர், பினாங்கு முதலிய வெளிநாட்டு நேயர்கள் வி. பி. செலவு சேர்த்து முன்பணம் அனுப்பவேண்டும். நீங்கள் கடிதம் எழுதும்போது தெளிவாய் அச்செழுத்தைப்போல இங்கிலீஷிலோ தமிழிலோ எழுதவேண்டும். சோல்ஏஜண்டுகள் தேவை. விபரம் நேரில் எழுதி தெரிந்துகொள்ளவும்.

உ. கா. நாகூர்மீரா அன் பிரதர்,
7-வது தெரு, ஏர்வாடி போஸ்டு,
(14) திருநெல்வேலி ஜில்லா, [தென்னிந்தியா.]

# பேர்பெற்ற ஊதுவத்திகள்.

எங்களிடம் ஆகவர்த்தி, அம்பர்வத்தி, ஜவ்வாதுவத்தி, புனுகுவத்தி, கஸ்தூரிவத்தி, அநேக தினுசு ஊதுவத்திகள் நிரம்பவும் திடமான சரக்காய் தயார்செய்து, வியாபாரிகளுக்கு குறைவு விலையாகவே அனுப்புகிறோம். எங்கள் சரக்கு ஒரு தடவை வரவழைத்துப்பார்த்தால் பிறகு எங்கள் சரக்கை மறக்காமல் அடிக்கடி ஏராளமாய் ஆர்டர் செய்வீர்கள் என்று நம்புகிறோம். வேண்டியதற்கு உடனே எழுதுங்கள்.

விலாசம்:—

பி. கே. பாலசுந்தரம் நாயுடு அண்டு கோ,
ரங்கசாமிகோயில் தெரு,
தந்தி—'மகாவிஷ்ணு' பெங்களூர்டவுன்.

இதுவரையில் தமிழில் வெளிவராத புஸ்தகம்

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன்



அநுபோகப்பயிற்சிமுறையும்

விலை ரூபா 1—8—0

(தபால் சார்ஜ் வேறு)

வெளிநாட்டு ஆர்டர்களுக்கு
முன் பணம் அனுப்ப வேண்டும்.

மோட்டார் ஸ்கூல், (1916-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது)

இங்கு 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிஸம் கற்றுக் கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக் கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,
(11) மைலாப்பூர், சென்னை

## பாரீஸ் படுக்கரை.

போட்டோ படங்கள்.

பாரீஸ தேசத்தில் உள்ள அழகிய பெண்களை போட்டோ எடுத்துத் தயாரிக்கப்பட்டது. மிக்க அழகாகவும் விதவிதமான காதல் ஊட்டும் படங்கள் பற்பல மாதிரியாக நடிக்கும் காதலைத் தந்து மனதிற்கு சந்தோஷத்தைத் தரும். ஒரு தடவை ஆர்டர் செய்துபார்த்தால் உண்மை விளங்கும், வெளி நாட்டினர் முன் பணம் அனுப்பவும். டஜன் ஆல்பத்துடன் விலை ரூ. 1—14—0

மு. கண்ணன்,
மவுண்ட்ரோட், P. O. சென்னை

WANTED.

Candidates for Telegraph and Station Master's Classes.

Full particulars and Railway Fare Certificate on 2 annas stamp.

Apply to:—
Imperial Telegraph
College, Nai Sarak, Delhi 63

## மதிப்புரை.

கந்த ரக்கரப்பா, திருத்தமிழ் முறை என்று மகுடமிட்ட புத்தகம் ஒன்று எமது பார்வைக்கு வந்துளது. இதனை ஆக்கியோர் செந்தமிழ் கலா வல்லவரும், பண்டிதரும், நூலாசிரியருமான முடிவைத்தானேந்தல் முருங்கோவேள் சங்கர பிள்ளையவர்களாகும். இந்நூல் அறத்துப்பால், பொருட்பால் என இரண்டு பகுதிகளாய் பிரிக்கப்பட்டு, அவை முறையே அகர முதற் றொடங்கி வெளவீராக, இனிய அகவற் பாமுறையில் சொன்னயம், பொருள் நயங்களோடு வரையப்பட்டு, படிப்பவர் ஒழுக்கம் அறிவு, முதலிய அரும் பெரும் குணங்களடையுமாறு, புத்தி புகட்டக் கூடியதாயுமிருக்கிறது. இது பொதுவாக தமிழவாக்கொண்ட எல்லோருக்கும், சிறப்பாக மாணவருக்கும் பெரிதும் பயனளிக்குமென்றும் நம்புகிறோம்.

ப—ர்

## கடவுள் கடவுளென காசைத் தொலைக்காதே

## நமது அநுதாபம்.

நண்பர்உயர் திருவாளர்வி.எஸ். சொங்கோட்டய்யா அவர்களின் அருமைச் குமாரர் தம் இளம் வயதில் காலமானதைக் கேட்டு நாம் மிகவும் வருந்துகிறோம். அவர் தம் குடும்பத்தினர்க்கு நமது அநுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

—

கோவை பிரபல பருத்தி வியாபாரியான திருவாளர் வி. எஸ். செங்கோட்டையா அவர்களின் இளைய குமாரர் லோகநாதன் காலமடைந்ததைக் கேட்டு வருந்துவதொடு நேயர்களும், உர்வினர்களும் தம் அநுதாபத்தை அவாது குடும்பத்தினருக்கு தெரிவித்துக் கொள்ளுகின்றனர் என்று ஒரு நிருபர் நமக்கு எழுதியிருக்கிர்.

## கவலை ஏன்?

பிரதி மாதமும் வரும்படியுள்ள வியாபாரிகள், தொழிலாளர்கள், விவசாயிகள் முதலானவர்களுக்கு எந்த மாதத்தில் பணம் அவசரமேற்படுகிறதோ அப்போது பண அவசரத்தை நிவர்த்தி செய்துகொள்ளவும் ஏஜண்டாகயிருக்கிறவர்களுக்கு லெகுவாய் அளவிறந்த கமிஷன் கிடைக்கும் படியாயுமுள்ள நிபந்தனைகள் அடங்கிய புஸ்தகத்துக்கு உடனே எழுதினால் உடன் அனுப்பக்கூடும்.

மானேஜர்
கனலக்ஷிமி கம்பெனி
திருநெல்வேலி
Tinnevelly (S-India)

## அறிவிப்பு.

கடிதம் எழுதும் சந்தா நேயர்கள் தவறாமல் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து எழுதவேண்டும். சந்தா நம்பர் தெரியாத புதிய சந்தாதாரர்கள் தாங்கள் பணம் கட்டி சேர்ந்த மாதம், தேதியையாவது கட்டாயம் குறிப்பிட்டு எழுதவேண்டும்.

ப—ர்

# தமிழரசு.

## ஒரு புதிய அரிய வாரப் பத்திரிகை.

சித்திர வர்ணப்படங்களுடன்

சென்னையினின்று வெளிவருகின்றது.

உலக முழுவதும் நடைபெறும் அரிய இனிய நிகழ்ச்சிகளை உள்ளபடி உணர்த்தும்! அறிவை வளர்க்கும். பெரிய உண்மைகளை அழகிய முறையில் தெள்ளிய செந்தமிழ் நடையில் நன்கு புகட்டும். அரசியல் துறையில் தனக்குத் தோன்றியவற்றை அவர் அச்சமின்றி எடுத்து உரைக்கும்! வியாபார அனுக்கங்களை அவ்வப்போது விரிக்கும்! வைத்திய நுட்பதிட்டங்களை வகுத்துக் காட்டித் தெரிக்கும், இதனைப் படிப்போர் தமிழறிவு, சமயசாத்திர ஞானம், ஆசார சீர்திருத்த உண்மைகள், அரசியல் முறை, உலக நடை முதலியவற்றை ஒழுங்காக உணரலாம்.

வேண்டுவோர் கீழ்வரும் விலாசத்துக்கு எழுதுவார்களாக:—

மாதிரி பிரதி இனும்.

| | | | |
|---|---|---|---|
| வருட சந்தா | உள்நாடு | ரூ. | 3—0—0 |
| | வெளிநாடு | ரூ. | 4—0—0 |

தமிழரசு காரிய நிலயம்,
31 வைத்தியநாத முதலி வீதி, சென்னை.



## குடி அரசு புத்தகாலயம்.

வேதப் புரட்டை வெளியாக்கும்:—

| | | |
|---|---|---|
| ஞானசூரியன் | | (அச்சில்) |
| இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம் | | 0—4—0 |
| சுயமரியாதைப் பாடல்கள். | ... | 0—2—0 |
| இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. | ... | 0—2—0 |
| சுயமரியாதைத் தாலாட்டு. | ... | 0—2—0 |
| சோதிடப் புரட்டு. | ... | 0—2—0 |

8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, 5 ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு



## அன்டையன்ஸ் கேம்பிரிட்ஜ்.

இன்ஸ்டிடியூட் நாசரேத் S. I. R.

ஸ்தாபன ஞூ 1920.

இளமையிற் படிக்கவில்லையென்று வருந்தவேண்டாம்.

தமிழ்வாசிக்க, எழுதத்தெரிந்த 100-பேர்கள் நமது ஸ்பெஷல் மெட்ரிக்குலேஷன் கோர்ஸுக்கு தபால் மூலம் படிக்க எடுக்கப்படுகிறார்கள். அவர்கள் சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட கேம்பிரிட்ஜ் சீனியர் பாஸ் செய்து காலேஜில் சேரலாம். அல்லது இங்கிலீஷ் உயர்தரப்பட்டங்களுக்கு இங்கிலாந்து, கொழும்பு, சிங்கப்பூர்களில் வாசிக்கலாம். லோயர், ஹையர் கிரேட் உபாத்தியார்களுக்கு அதிகப் பிரயோஜனமானது. தற்சமயஞ் செய்யும் தொழிலுக்கும் உத்தியோகத்திற்கும் யாதொரு இடையூறின்றி வாசிக்கலாம். தினசரி மாணவர்கள் சேர்ந்தவண்ணமிருக்கிறார்கள். உடனே பிராஸ்பெக்டசுக்கு ஒரு அணு ஸ்டாம்பு அனுப்பவும்.

டைரக்டர்.



# நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

(1919-ல் பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டது)

சேர்மன்:—

## சர்: டோராப் ஜே டாட்டா. Kt.

மூலதனம்:

| | | | |
|---|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | | ...ரூ. | 6,00,00,000. |
| பதிவு செய்யப்பெற்ற | ,, | ...ரூ. | 3,56,05,275, |
| வசூலான | ,, | ...ரூ. | 71,21,055. |

இதைப்பற்றி 1929 ஜூன் மாதம் வெளிவந்த "இந்தியன் இன்ஷியூரன்ஸ்" பத்திரிகை பின் வருமாறு கூறுகிறது: "நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி இந்தியாவிலே மிகவும் பெரிய ஜெனரல் இன்ஷியூரன்ஸ் கம்பெனியென்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. மூலதனத்தை கவனித்தால் அது உலகத்திலுள்ள பெரிய இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் ஒன்றென்று கூறிக்கொள்ள அதற்கு உரிமை உண்டு."

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் உயிர், நெருப்பு, மேரைன், மோட்டார்கார், விபத்து முதலிய பலவித அஷ்யூரன்ஸ்களுக்கும் ஏஜென்சிகள் கிடைக்கும்.

பிராஞ்சு மானேஜர்,
4, முதல் லைன்பீச், சென்னை.



நிமிஷ நேரத்தில் குணமடைவதைவிட்டு ஏன் கவலைப்படுகிறாய்?
அபூர்வ சிகிச்சை! இதை—சோதனை செய் ஆச்சரிய நிவர்த்தி!

# சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்திலுல் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, கஷ்டசுவாசம், மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்திசெய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்தும் கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது.

தபால் கூலி அணு. 4. ஒரு டஜன் டின் விலை ரூ. 9—0—0
6 டின் விலை ரூ. 5—4—0 3 டின் விலை ரூ. 3—0—0.
F. M. S. முதலிய ஊர்களுக்கு முன்பணம் ரூ. 2—8...0.
இல்லாத ஆர்டர்களை கவனிக்கப்படமாட்டாது.

புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,
அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S.


"உண்மைவிளக்கம் பதிப்பகத்தில்" அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாளால் வெளியிடப்பட்டது.